

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக்கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

செயற்றிறன் அறிக்கை

2021

செலவு தலைப்பு இல – 408

கௌரவ பிரசன்ன ரணவீர

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

திரு.எம்.ஏ.பீ.வீ. பண்டாரநாயக்க

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர்

அமைச்சரின் செய்தி



நிலவிய சவால்களுக்கு மத்தியில் அரச கொள்கைகளின் பிரகாரம் மேன்மை தங்கிய சனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை, பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு இயன்றமையையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகம் எதிர்நோக்கிய கடும் நெருக்கடியானது, எமது நாட்டுக்கும் பாரிய சவாலாக அமைந்தது. இதனால் ஏற்படுத்திய தாக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் தொலைநோக்கு பார்வை காரணமாக, பல்வேறு துறைகளில் பாதிப்புகள் குறையும் வகையில் நடாத்திச் செல்வதற்கு இயன்றது என்பதை நாம் அறிவோம். புதிய இயல்பு வாழ்க்கை முறையின் கீழ் நாட்டின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு அதனால் இயன்றுள்ளது. ஆயினும், அந்நியச் செலாவணி பிரச்சினையுடன் நாடு பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவை அனைத்தையும் பொது மக்களுக்கு சார்பான முறையில் தீர்ப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றது. அதன்போது எனது அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பை மேலும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு தேசிய அபிலாஷைகளை எய்துகொள்ளுதல் எமது பொறுப்பாகும்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுவூட்டல் எமது ஏகோபித்த அபிப்பிராயமாகும். அதற்கான திட்டங்கள் படிப்படியாக அமைச்சு மற்றும் நேர்வரிசை நிறுவனங்களின் கீழ் நடைமுறைப்படுகின்றன. அதே போன்று அதன் பொருட்டான பின்னாய்வு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

கிராமியக் கைத்தொழிலாளர்கள் நடைமுறையில் எதிர்நோக்கும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். கற்றறிவாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்று சம்பிரதாய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களின் அனுபவங்களையும், அதன்போது நாம் முதன்மையாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொறுப்பாக செயற்பட்டோம்.

அதன்படி, ஆற்றல்களைக் கொண்டுள்ள நபர்களை அடையளாம் கண்டு அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுகின்றன. சார்ந்து வாழும் உளப்பாங்கிலிருந்து நீங்கி தொழில் முயற்சியாளராக உருவாகும் உளப்பாங்கினை ஏற்படுத்துவதற்கு அவர்களை வலுவூட்டல் வேண்டும். அதன் பலனாக அவர்கள் தூண்டுவிக்கப்படுவதால் எமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இலகுவாக அமையும் என்பது எனது அனுபவமாகும்.

2021 ஆம் ஆண்டுக்காக அமைச்சிடம் ஒதுக்கப்பட்ட மூலதன தொகையை மிகப் பயனுள்ளதாக முகாமைத்துவம் செய்து, சரியான இடங்களுக்கு சரியான பங்களிப்பை வழங்குவதற்கு மேற்கொண்ட முயற்சி பயனுள்ளதாக அமைந்தது. தேசிய அருங்கலைகள் சபை, விதாதா நிலையம் ஆகியன அமைச்சின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை மிகவும் சரியாக மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு ஆற்றிய பணியும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கிராமிய கைத்தொழிலாளரது உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல் மட்டுமல்லாது உற்பத்திகளின் ஆற்றலை அதிகரித்தலும், தற்போதுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் பயனுள்ளதாக அமையும்.

தேசிய பொருளாதாரத்தில் மட்டுமின்றி கிராமிய மக்களின் சுபீட்சத்திற்காக எனது அமைச்சின் கடமைப் பொறுப்புக்களை வலுவூட்டுவதற்கு பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் வழங்கிய ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

பிரசன்ன ரணவீர
இராஜாங்க அமைச்சர்
பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு.

செயலாளரின் செய்தி



பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருள்கள் உள்ளிட்ட பாரம்பரிய கைத்தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, குறித்த கைத்தொழில்கள் எதிர்கொள்ளும் மூலப்பொருள் பெற்றுக்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுளை வழங்குதல், சந்தைக்கான தடைகளை நீக்குதல், தயாரிப்புகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தை சேர்த்துக்கொள்ளுதல், பயிற்சி வாய்ப்புகளை சுலபமாக்குதல் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் மேம்பாட்டுக்கு வழிவகுத்தல் மட்டுமின்றி கிராமிய கைத்தொழிலை விருத்தி செய்தல் என்பன அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு தாபிக்கப்பட்ட, பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தனது கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றிய பூரண ஆண்டாக 2021 ஆம் ஆண்டை அறிமுகப்படுத்தலாம்.

கடந்து முடிந்த ஆண்டை கவனத்தில் கொள்கையில் பாரம்பரிய மற்றும் கிராமப்புற கைத்தொழில்கள் துறையில் மட்டுமின்றி கைத்தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் அமைச்சும் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளமை தொடர்பில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். கிராமப்புற கைத்தொழிலாளர்களை தொழில் முயற்சியாளர்களாக முன்னேற்றும் போது, அவர்களுக்கான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை தரநிலைப்படுத்தலுக்கு அனுப்பி வைத்தல், தொழில்நுட்ப உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல் மூலம் கைத்தொழிலாளர்களின் தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன குறிப்பிடத்தக்க பணிகளாக மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் 19 கைத்தொழிலாளர்களுக்கு உற்பத்தி தரச் சான்றிதழ்கள் மற்றும் தரநியம சான்றிதழ்கள் வழங்க முடிந்தமை கிராமிய கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு நாம் வழங்கிய ஒத்துழைப்பில் ஒரு துளியாகும். அதே போன்று 2021 ஆம் ஆண்டு மொத்த நாடும் உள்ளடங்கும் வகையில் 518 கைத்தொழிலாளர்களிற்கு தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு அமைச்சிற்கு இயன்றுள்ளது. மேலும் ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில்முயற்சியாளரை உருவாக்குதல் மற்றும் கிராமிய கைத்தொழில்களை இணைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மூலம் ஏறத்தாழ 12000 இற்கு அண்மித்த கைத்தொழிலாளர்களை புதிய கைத்தொழிலாளர்களாக முன்னெடுத்து வருவதற்கு முடிந்தது.

இதற்கு மேலதிகமாக, பாரம்பரிய கிராமப்புற கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அமைச்சு ஓரளவில் தனது பங்களிப்பை வழங்கியது. மாகாண மற்றும் பிரதேச சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்குதல், விசேட விற்பனை நிலையங்களை தாபித்தல், இலத்திரனியல் விற்பனை வாய்ப்புகளுக்காக கைத்தொழிலாளர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சிற்கு முடிந்தது. அதேபோன்று, கிராமிய கைத்தொழில்களுக்கு தேவையான மூலப் பொருட்களை பயிரிடும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், மூலப்பொருட் வங்கி தாபித்தலின் கீழ் அரசு மற்றும் பகுதிநேர அரச நிறுவனங்களிலிருந்து அகற்றப்படுகின்ற பழைய பித்தளை, செம்பு, போன்ற மூலப்பொருட்களை கொள்வனவு செய்து, அவற்றை பதிவு செய்துள்ள பாரம்பரிய கைத்தொழிலாளர்களிடம் சலுகை விலையில் வழங்குதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் அமைச்சர் அவர்களின் தலைமைத்துவமும் வழிகாட்டுதலும் போன்றே உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பும் காரணமாக மேற்கூறிய பணிகளை செவ்வென நிறைவேற்ற முடிந்தமை 2021 ஆம் ஆண்டில் இவ்வமைச்சு அடைந்து கொண்ட சாதனையாக கருதப்படலாம். அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய எனது பணியாற்றொகுதியினருக்கும், தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் உள்ளிட்ட பணியாற்றொகுதியினருக்கும் கௌரவ அமைச்சர் அவர்கள் மற்றும் அவர்களது பிரத்தியேக பணியாற்றொகுதியினருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஏ.பி.வீ.பண்டாரநாயக்க,
செயலாளர்,
பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

2021 ஆம் ஆண்டில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள்

- **தேசிய அருங்கலைகள் பேரவை**

  தலைவர் - திரு. சம்பத் எரெஹெபொல

  தொ.பே.இல. - 011 2784425 / 0711738876

  தொலைநகல் - 011 2785720

  மின்னஞ்சல் - chairmanncc2020@gmail.com

உள்ளடக்கம் **பக்கம்**

1. அத்தியாயம் 01 - நிறுவன முகக்குறிப்பு/ நிறைவேற்றுச்சுருக்கம் 103
   - 1.1. அறிமுகம் 105
   - 1.2. தொலைநோக்கு, செயற்பணி, நிறுவனத்தின் நோக்கம் 105 - 106
   - 1.3. அமைச்சின் கடமைகளும், பணிகளும் 106
   - 1.4. நிறுவன அமைப்பு முறை 107
   - 1.5. அமைச்சின் கீழுள்ள பிரிவுகள் 108
   - 1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 109

2. அத்தியாயம் 02 - 2021 ஆம் ஆண்டுக்கான செயற்றிறன் 111
   - 2.1. அமைச்சின் செயற்றிறன் - 2021 113 - 139
   - 2.2. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்றிறன் 141 - 168

3. அத்தியாயம் 03 - 2021 ஆம் ஆண்டுக்கான நிதியியல் செயலாற்றுகை 169
   - 3.1. நிதியியல் செயலாற்றுகை கூற்று 171 - 173
   - 3.2. நிதியியல் நிலை கூற்று 174 - 175
   - 3.3. காசுப் பாய்ச்சல் கூற்று 176 - 178
   - 3.4. நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் 179
   - 3.5. வருமான சேர்க்கைக்கான செயற்றிறன் 180
   - 3.6. ஒதுக்கப்பட்ட நிதியினை பயன்படுத்துதல் தொடர்பிலான செயற்றிறன் 180
   - 3.7. நி.செ 208 ன் படி, ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இவ்வமைச்சுக்கு பிரதானமிடப்பட்ட ஒதுக்கீடு 180
   - 3.8. நிதியல்லா சொத்துகளின் செயலாற்றுகை பற்றிய அறிக்கையிடல் - 2021 181
   - 3.9. கணக்காய்வாளரின் அறிக்கை 182 – 186

4. அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டி 187 - 191

5. அத்தியாயம் 05 - நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைகின்ற செயலாற்றுகை 193
   - 5.1. அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்கு குறிகாட்டிகள் 195 - 199
   - 5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றும் சவால்கள் 200

6. அத்தியாயம் 06 - மனித வள முகக்குறிப்பு 201
   - 6.1. பதவியணி முகாமைத்துவம் 203
   - 6.2. நிறுவனத்தின் மனித வள பற்றாக்குறையான அல்லது அதிகமான நிலை காரணமாக நிறுவனத்தின் செயலாற்றுகையில் ஏற்பட்ட தாக்கம் 203
   - 6.3. மனித வள மேம்பாடு 2021 203 - 207

7. அத்தியாயம் 07 - இணக்குவித்தல் அறிக்கை 209 - 224

அத்தியாயம் - 01

நிறுவன முகக்குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

1.1. அறிமுகம்

- 2187/27 ஆம் இலக்க மற்றும் 2020.08.09 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டது.

- 1982 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க மற்றும் 1996 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கொண்ட தேசிய அருங்கலைப் பேரவை சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள தேசிய அருங்கலைப் பேரவை, விதாதா நிலையம் மற்றும் **மரப்பொருட்கள் ஆக்க நிலையம்** அமைச்சின் விடய எல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

- கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் பேரில் "உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்காக நேயம்மிக்க வியாபாரச் சூழலொன்றை உருவாக்குவதற்காக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு விடயங்களுக்குரிய கொள்கைகளை வகுத்தற்கு உதவுதல், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல், தொடராய்வு மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியன அமைச்சின் கடமைப்பொறுப்புகளாகும்.

- பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மாண்புமிகு அமைச்சராக பிரசன்ன ரணவீர அவர்களும் அமைச்சின் செயலாளராக கௌரவ எம்.ஏ.பீ.வி.பண்டாரநாயக்க அவர்களும் செயலாற்றுகின்றனர்.

- இந்த அமைச்சு கொழும்பு 01, அச்லண்ட சதுக்கம், உலக வர்த்தக நிலையம், மேற்கு கோபுரம், 07 ஆம் மாடியில் மற்றும் கௌரவ அமைச்சரின் அலுவலகம் கிழக்கு கோபுரத்தின் 36 ஆம் மாடியில் நிறுவப்பட்டுள்ளது.

1.2. பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் தொலை நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

தொலைநோக்கு

பாரம்பரிய மற்றும் கிராமரிய கைத்தொழிலினூடாக சர்வதேச சந்தையினை வென்று ஆசியாவின் மையமாக உருவாகுதல்

செயற்பணி

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் உள்ளடங்களாக பாரம்பரிய கிராமியக் கைத்தொழில் தொடர்பில் முன்னுரிமை வழங்கி உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக சந்தையினை கைப்பற்றுவதற்காக கைத்தொழில்களின் பெறுமதியினை அதிகரித்து மூலப்பொருட்களை மற்றும் சந்தைக்காகவுள்ள தடைகளை நீக்கி நவீன தொழில்நுட்பத்துடன் இரண்டரக் கலந்து பாரம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழிலை மேம்படுத்துதல்.

நோக்கங்கள்

- கைத்தொழிலாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை தரத்தில், உகந்த செலவின் கீழ், உள்ளூர் மூலப்பொருள் வழங்குநர்களுக்கு முன்னுரிமை அளித்து, மேலும் சந்தையில் தேவைப்பாடு நிலவும் மூலப்பொருட்கள் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து பெற்று தொடர்வாரியான வழங்கலை உறுதிப்படுத்துதல்.

- இறக்குமதி செய்யப்பட்ட பதிலீட்டுப் பொருட்களுக்கு போட்டியை வழங்கி உள்ளூர் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு சந்தையினை ஈர்க்கக்கூடிய தயாரிப்புகளை உருவாக்குவதன் மூலம் குறித்த சந்தையைக் கைப்பற்றுவதற்கும் சூழலை உருவாக்குதல்.

- இறக்குமதி செய்யப்பட்ட பதிலீட்டுப் பொருட்களிலிருந்து ஏற்பட முடியுமான பாதகமான விளைவுகளிலிருந்து கிராமியக் கைத்தொழிலினைப் பாதுகாப்பதற்காக கொள்கை வரம்பினைத் தயாரித்தல்.

- கிராமியக் கைத்தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் நிலையான மூலதனம் மற்றும் செயற்படு மூலதன தேவைப்பாடுகள் எளிதில் மற்றும் விரைவாக வழங்குவதற்கு தேவையான பின்னணியை அமைத்தல்.

- பாரம்பரிய தொழில்நுட்பத்தைப் பாதுகாத்தல், கிராமப்புற கைத்தொழில்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் நவீன தொழில்நுட்ப செயல்முறைத் தொடர்பில் விழிப்புணர்வுடன் கூடிய கிராமப்புற கைத்தொழிலாளர்களை உருவாக்குதல் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.


- பாரம்பரிய மற்றும் கிராமப்புற கைத்தொழில்துறை சமூகத்தின் அந்தஸ்துடன் விளங்குகின்ற தொழில்சார் துறையாக மாற்றுதல்

- பாரம்பரிய மற்றும் கிராமப்புற கைத்தொழில்களுக்காக உகந்த சூழலை உருவாக்குவதற்குத் தேவையான விதிகள் மற்றும் நிறுவன கட்டமைப்பினைத் தயாரித்தல்.


1.3. அமைச்சின் கடமைகளும், பணிகளும்

- கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின்பேரில் "உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்காக நேயம்மிக்க வியாபாரச் சூழலொன்றை உருவாக்குவதற்காக" விதித்துரைப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு விடயத்துடனும், அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும், தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல், தொடராய்வு மற்றும் மதிப்பீடு செய்தலும்.

1.4. அமைச்சின் நிறுவன அமைப்பு முறை



1.5. அமைச்சின் கீழுள்ள பிரிவுகள்



1.6. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

2187/27 ஆம் இலக்க மற்றும் 2020.08.09 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் விடய எல்லைக்கு பின்வரும் நிறுவனங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளன.

- தேசிய அருங்கலைப் பேரவை
  (1982 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க மற்றும் 1996 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கம் கொண்ட தேசிய அருங்கலைப் பேரவை சட்டம்)

- விதாதா வள நிலையம்

- மரப்பொருட்கள் ஆக்க நிலையம்

அத்தியாயம் - 02

2021 ஆம் ஆண்டுக்கான செயற்றிறன்

2.1. அமைச்சின் செயற்றிறன் - 2021

2.1.1 நிர்வாகப் பிரிவு

அமைச்சின் சிறந்த தாபன நிர்வாகச் சூழலைப் பேணுதல், மனித மற்றும் பௌதீக வள முகாமை, பதவியணியினரின் தொழில்சார் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது மற்றுமல்லாது அமைச்சின் சேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவுதல் நிர்வாகப் பிரிவின் கடமைப்பொறுப்பாகும்.

2021 ஆம் ஆண்டில் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

- **பதவியணியினர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.**

அமைச்சின் அலுவலர்களின் வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் அவர்களிடமுள்ள விடய அறிவை விருத்தி செய்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் சேவைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நிர்வாகப் பிரிவின் மூலம் வருடாந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டில், 90 அலுவலர்களின் பொதுவான பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் 110 அலுவலர்களை வெளிவாரி பயிற்சித் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கச் செய்யவும் முடியுமாக இருந்தது.

தொடர் இல	பயிற்சி பாடநெறியின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	ஏற்கப்பட்ட செலவு (ரூ.)	பயன்கள் / பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
01	அரசாங்க உத்தியோகத்தர்களின் பீ கணக்கு தயாரித்தல்	வ/திறன் அபிவிருத்தி நிதியம்	5,000.00	01
02	ஊழியர் தன்முனைப்பாற்றல் - வெளிவாரிப் பயிற்சி	துல்ஹிரிய "மார்ஸ் ஹோல்டின்ஸ்" நிறுவனம்	300,000.00	110
03	அபிவிருத்தி ஆராய்ச்சி பற்றிய பட்டப்படிப்பின் பின் பட்டம் (சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில்)	கொழும்பு பல்கலைக்கழகம்	172,500.00	01
04	க்ரபிக் டிசைனிங் பாடநெறி	இலங்கை அச்சீட்டு நிறுவனம்	49,500.00	02
05	அலுவலக குறிப்புகள் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்களை எழுதுதல்	தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்	80,000.00	20
06	இடைநிலை அலுவலர்களுக்கான ஆங்கிலமொழி டிப்ளோமா	மிலோதா நிறுவனம்	150,000.00	02
07	கணக்கியல் கடமைப்பொறுப்பு மற்றும் செயல்முறைப் பயன்பாடு	தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்	80,000.00	10

தொடர் இல	பயிற்சி பாடநெறியின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	ஏற்கப்பட்ட செலவு (ரூ.)	பயன்கள் / பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை
08	வெப் டிசைனிங் பாடநெறி	நு- டுநயசலைபெ நிறுவனம்	50,000.00	02
09	ஆதரவு பதவியணியினருக்கான பெறுகைச் செயல்முறை	தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்	96,000.00	12
10	அரசாங்க நிறுவனங்களின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பில் தாக்கம் விளைவிக்கின்ற அடிப்படை கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் கணக்கியல் தரநிலைகள்	வ/திறன் அபிவிருத்தி நிதியம்	7,000.00	01
11	வியாபார நிர்வாகம் தொடர்பாக விஞ்ஞானமாணி பட்டம்	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகக்கழகம்	214,000.00	01
12	லீவு விடயத்துக்குப் பொறுப்பான அலுவலரின் கடமைப்பாங்கு மற்றும் பொறுப்பு	தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்	4,000.00	01
13	வருடாந்த அங்கத்துவ நிதிக்கொடுப்பனவு	இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்	16,000.00	01
14	ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில்முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய விதாதா உத்தியோகத்தர்களின் கொள்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	கைத்தொழில்சேவை பணியகம்	182,500.00	35
15	அரசாங்க துறையின் அலுவலக செய்முறைகள்	தொலைக்கல்வி நிலையம்	10,000.00	02
மொத்தம்			**1,416,500.00**	**201**

அமைச்சின் பதவியினரின் தன்முனைப்பாற்றலின் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வெளிவாரி பயிற்சி செயலமர்வு 2021.04.07 ஆந் திகதி துல்ஹிரிய "மார்ஸ் ஹோல்டின்ஸ" நிறுவனத்தின் "எதீனா" பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இதற்காக மாண்புமிகு இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட பதவியணியினரின் அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டுள்ளனர்.







வெளிவாரி பயிற்சி பட்டறையின் சில காட்சிகள்

- **தனிப்பட்ட ஆவணக்கோவை இற்றைப்படுத்துதல்.**

2187/27 மற்றும் 2020.08.09 ஆந் திகதி அதி விசேட வர்த்தமானி மூலம் விதாதா வள மையம் மற்றும் அதன் பதவியணியினரின் நிர்வாக நடவடிக்கைகள் இந்த அமைச்சின் நோக்கெல்லையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கு கிட்டத்தட்ட 1000 அளவு தனிப்பட்ட ஆவணக்கோப்புகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் அமைச்சின் நிர்வாக பிரிவுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய பதவியணியினருக்காக பல வருட சம்பள ஏற்றங்கள் வழங்குதல், தரம் உயர்த்துதல்கள், சம்பளத் திருத்தங்கள், ஓய்வூதியம் பெறல், வினைத்திறன் காண் தடைப்பரீட்சை நடத்துதல் ஆகிய நடவடிக்கைகள் பல 2021 ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து மிகவும் தகுதிவாய்ந்த 25 உத்தியோகத்தர்கள் மாவட்ட விதாதா அதிகாரிகளாக பதவியுயர்த்துதல் மற்றும் விதாதா பிரிவின் மற்றும் விதாதா வள நிலையங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் 70 பேர் II ஆம் தரத்துக்கு பதவி உயர்த்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பளம் திருத்த நடவடிக்கைகள் முழுமையாக நிறைவேற்றி உரிய கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அலுவலக தொழிலாளர் சேவையிலுள்ள ஊழியர்களிடமிருந்து 20 பேர் II ஆம் தரத்திற்கு உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சேவையில் நிரந்தரம் செய்யப்படாத அலுவலர்கள் சேவையில் நிரந்தரம் செய்வதற்கும், சம்பள திருத்த நடவடிக்கைகள் மற்றும் அரசாங்க மொழித்தேர்ச்சியிலிருந்து விடுவிக்க வேண்டிய நடவடிக்கைகள் முழுமையாக முடிப்பதற்கும் இந்த வருடத்துக்குள் இயலுமையாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக, பதவியணியிலிருந்து சுமார் 100 அலுவலர்களின் தனிப்பட்ட ஆவண கோப்புகளுக்குரிய அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளும் நிர்வாகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்

- **அலுவலர்களுக்காகத் தேவைப்படுகின்ற காரியாலய உபகரண தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல்**

தொற்றுநோய் நிலைமையில் விதாதா வள நிலையங்களில் கடமை பொறுப்புகள் தொடர்ச்சியாக கொண்டு நடாத்துதல் மற்றும் அமைச்சின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதி வாய்ந்த முறையில் மேற்கொள்வதற்காக இணையதள வசதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் நாடளவிய ரீதியில் அமைந்துள்ள விதாதா வள நிலையங்களுக்கு ரவுட்டர் மற்றும் சிம் கார்ட்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று அமைச்சின் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் வினைத்திறனை மேலும் மேம்படுத்தும் நோக்கில் அந்தப் பிரிவின் தேவைக்களுக்காக கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகள் மற்றும் ஒட்டு மொத்த அமைச்சின் பயன்பாட்டிற்காக டுப்லோ இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டன.

இதற்கு மேலதிகமாக மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அவர்களின் பொதுமக்களுக்கான தினத்தை நடாத்தும் வகையில் பத்தரமுல்லை ‘‘அபே கம’’ வளாகத்தில் அமைந்துள்ள லக்ஷல விற்பனை காட்சியறையின் உயர் மாடி நீர் மின்சாரத்துடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட அலுவலகமாக அமைக்கப்பட்டது.

2.1.2 நிதிப் பிரிவு

இந்தப் பிரிவு மூலம் நிதிச் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்காக நிச்சயமான நிதித் தகவல்கள் மற்றும் நிதி முகாமைத்துவ முறைமையொன்றினைத் தயாரித்து அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல்.

2021 ஆம் ஆண்டில் கணக்குப் பிரிவின் மூலம் ஆற்றப்படுகின்ற கடமைப்பொறுப்புகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

- **அனைத்து கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்.**

2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்க நிதிசார் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக அமைச்சின் அலுவலர்களின் சம்பளம், மேலதிக வேலைநேரக் கொடுப்பனவு, பயணச் செலவுகள், கடன் முற்பணங்கள் போன்றவை உள்ளிட்ட அனைத்து கொடுப்பனவுகள் தொடர்பில் கணக்கிலிடுவதற்கு உரிய பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் முறைப்படி இற்றைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், முற்பண ''பீ '' கணக்கு மற்றும் நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **கட்டுநிதி மற்றும் ஒதுக்கீடுகளை விடுவித்தல்**

நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகங்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனைத்து விதாதா நிலையங்களிலும் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை விடுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விடுவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலை சபைக்கு நிதி மீளளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

- **வருடாந்த பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

2021 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் பெறுகை நடவடிக்கைகளுக்காக உதவுதல்.

- **தொடர்புடைய அறிக்கைகள், கணக்குகள் மற்றும் தகவல்களை சமர்ப்பித்தல்.**

2021 ஆம் ஆண்டில் பல்வேறு விடயங்களுடன் தொடர்புடைய தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், அரசாங்க கணக்குத் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து உரிய அறிக்கைகள், கணக்குகள் மற்றும் தகவல்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

- **வருடாந்த சரக்கிருப்பு ஒப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

2021 ஆம் வருடத்துக்குரிய வருடாந்த சரக்கிருப்பு ஒப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல்.

2.1.3 திட்டமிடல் பிரிவு

திட்டமிடல் பிரிவின் மூலம் அமைச்சு மற்றும் அதன் துணை நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளின் செயல்திறன், வினைத்திறன், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் பற்றிய மீளாய்வு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுவதுடன் வருடாந்த செயல் திட்டம் தயாரித்தல், செயல் நிறைவேற்ற அறிக்கைகள் தயாரித்தல், குறுகிய கால மற்றும் நடுத்தரகால மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கருத்திட்ட அறிக்கைகள் தயாரித்தல் ஏனைய முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற கடமைப்பொறுப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

- **வருடாந்த செயல்முறைத் திட்டம் தயாரித்தல்**

அரசாங்க நிதிச்சுற்றுநிருப இலக்கம் 02/2020 அமைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களின் மூலம் அவர்களது நிறுவனம் சார்பாக நடைமுறை வருடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் செயல்படுத்துவதற்காக வருடாந்த செயல்முறைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய 2021 நிதியாண்டுக்காக இந்த அமைச்சிற்குரிய செயல்முறைத் திட்டம் தயாரிப்பதுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் தலைமைத்துவம் வகித்து மேற்கொள்ளப்பட்டதுடன் அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற தேசிய அருங்கலை பேரவையின் செயல்முறைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அங்கீகரிப்பதுடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **வருடாந்த செயல்நிறைவேற்ற அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல்**

2020 ஆம் வருடத்துக்குரிய அமைச்சிற்குரிய செயற்பாடுகளுக்குரிய செயல்முறையினை உள்ளடக்கி வருடாந்த செயல்நிறைவேற்ற அறிக்கை தயார்செய்து இலங்கை பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்று, 2021 ஆம் ஆண்டில் இந்த அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் அடைந்த முன்னேற்றம் மற்றும் 2022 ஆம் வருடத்திற்கு செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற செயல்பாடுகள் உள்ளிட்ட "முன்னேற்ற அறிக்கை 2021 மற்றும் செயல்முறைத்திட்டம் 2022" தயாரித்து இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் முன்னேற்ற மீளாய்வை மேற்கொள்ளல்**

2021 ஆம் வருடத்தின் செயல்முறை திட்டத்திற்கு அமைவாக அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் காலாண்டின் ரீதியாக மீளாய்வு செய்தல்.

இதற்கு மேலதிகமாக, அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் செயல்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளும் திட்டமிடல் பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையில் இந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தொடர் நிகழ்நிலை முறையினூடாக மாவட்ட மட்டத்தில் செயல்படுத்தப்பட்டதுடன், அங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வு செய்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் எழுந்துள்ள சிக்கல்களுக்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தொடர் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் நாடு முழுவதும் 25 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் செயல்படுத்தப்படுத்தப்பட்டன.

.









- **கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படுகின்ற கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கு இணைவாக மாவட்ட மட்டத்தில் செயல்படுத்தப்படுகின்ற உள்ளூர் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் மேம்படுத்தும் அபிவிருத்தி குழுவின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

- **கிராமியக் கைத்தொழிலாளர்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவுத்தளத்தினை தயாரித்தல்**

.

நாடுபூராகவும் பரவலாக உள்ள கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் அந்தக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்கள் பற்றிய தகவல்கள் இல்லாமை, இந்த அமைச்சு ஆரம்பத்திலிருந்தே எதிர்கொண்ட பிர்ச்சினையாக இருந்ததனால் கிராமியக்

கைத்தொழிலாளர்கள் பற்றிய தகவல்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பெற்று தரவுத்தளம் தயாரிக்கும் நடவடிக்கைகளை இந்த பிரிவின் மூலம் ஆரம்பித்துள்ளது. இற்றையாகும் போது கிராமியக் கைத்தொழில்கள் 22 துறைகளுக்குரிய 19000 கைத்தொழிலாளர்களின் தகவல்கள் மேற்குறிப்பிட்ட தரவுத்தளத்திற்கு உள்ளிடப்பட்டுள்ளது

- **2022 ஆம் வருடத்துக்காகச் செயல்படுத்துவதற்குள்ள புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.**

“சுபீட்சத்தின் நோக்கு” தேசிய கொள்கை பிரகடனத்துக்கமைவாக இந்த அமைச்சின் நோக்கெல்லையை உள்ளடக்கிய வகையில் பின்வரும் 08 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய கருத்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இணக்கப்பாடு மற்றும் பரிந்துரைகளைப் பெறல் மற்றும் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

- ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில்முயற்சியாளரை உருவாக்குதல் மற்றும் இதன் மூலம் அடையாளம் காணப்பட்ட தொழில்முயற்சியாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிகரமான கிராமியக் கைத்தொழிலாளர்கள் உள்நாட்டு பல்பொருள் அங்காடி வலையமைப்பு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு பொருட்களை வழங்கும் பயனுள்ள கைத்தொழிலாளர்களாக வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.
- கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில்துறை கிராமங்கள் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- கிராமிய கைத்தொழில்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
- கைப்பணிக் கைத்தொழில் புத்தாக்க கற்கை நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய மூலப்பொருட்கள் வங்கியை நிறுவுதல்
- கிராமிய கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்
- மரப் பொருட்கள் தொடர்பான வடிவமைப்பு மற்றும் செயல்முறை புத்தாக்க நிலையத்தினை நிறுவுதல்
- தேசிய உலக இலகுபொறிக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2.1.4. விதாதா பிரிவு

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளினூடாக அறிமுகப்படுத்தப்படுகின்ற நவீன தொழில்நுட்பம் கிராம மட்டத்தில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் விதாதா நிகழ்ச்சித்திட்டம் 2000 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சின் கீழ் செயல்பாட்டில் இருந்த விதாதா நிகழச்சித்திட்ட இலக்கம் 2187/27 மற்றும் 2020.08.09 திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள்,மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நோக்கெல்லைக்குட்படுத்தியுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளை வெற்றிகொள்வதற்காக பொருத்தமான தொழில்நுட்பத்தை வழங்குதல், தரமேம்பாடு உற்பத்திகளை தரநிலைப்படுத்துதல் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தியினூடாக கிராமியக் கைத்தொழில் முயற்சியாளர்களின் நிலைத்தன்மையினை வலுப்படுத்தும் நோக்கினை முன்னணியாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டிலும் பின்வரும் கடமைப்பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒரு கிராமிய கைத்தொழில் தொழில்முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் ஒரு தொழில்முயற்சியாளர் உள்ளடங்கக்கூடிய வகையில் 14016 கிராமியக் கைத்தொழில் தொழில்முயற்சியாளர்கள் உருவாக்கும் நோக்குடன் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள்,மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற பிரதான நிகழ்ச்சித்திட்டமாக 2021 ஆம் ஆண்டில் இந்த நிகழச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் 800 ரூபா மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டம் பிரதேச செயலக மட்டத்தில் பிரதேச செயலாளரின் தலைமைத்துவத்தில் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் தீவிர பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் செயல்முறை முதன்மையாக விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், அனைத்து விதாதா உத்தியோகத்தர்களையும் விழிப்பூட்டுவதற்காக மாகாண மட்டத்தில் 09 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுள்ள நபர்களை தேர்ந்தெடுத்ததன் பின்னர் அவர்கள் அதற்காக பொருத்தமான அந்தஸ்திற்கு கொண்டு வருவதற்காக கோட்பாடு ரீதியிலான மற்றும் செயல்முறை பயிற்சி வழங்குவதற்காக அமைச்சின் விதாதா பிரிவின் மூலம் புத்திஜீவி

குழுவின் பங்கேற்பில் அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று தயார் செய்யப்பட்டது. அந்த பயிற்சித்திட்டத்துக்கமைய தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் உள்ள வளவாளர்களின் பங்கேற்புடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன

ஆயினும் தற்போதைய கொரோனா-19 தொற்றுநோய் நிலைமையில் செயல்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மக்களை ஒன்றுகூடுவது தடைவிதித்திருத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தியிருத்தல் போன்ற செயல்பாடுகள் காரணமாக வழக்கத்திற்கு அப்பால் சென்று மாற்று முறைகளை பின்பற்றி அக்குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்கு நிகழ்நிலை(Online) முறையினூடாக Zoom தொழில்நுட்பம் பயன்படுத்துதல் Microsoft teams போன்ற வீடியோக்கள் தொழில்நுட்ப முறை பின்பற்றி செயல்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உயர் பயன்பெறுநர் பங்கேற்பின் கீழ் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்த மற்றும் 25% பயன்பெறுநர் பங்களிப்பை வழங்கிய 11657 கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி தேவையான 83% பௌதீக செயல்திறனை அடைந்து இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

- **விதாதா யூடியூப் (YouTube) அலைவரிசையை ஆரம்பித்தல்**

தொழில்முயற்சி தொடர்பான நிபுணத்துவ குழுவின் அறிவு மற்றும் இலங்கை வர்த்தக துறையில் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களின் கருத்துக்கள் இத்துறையில் பிரவேசிக்கும் புதிய தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குதல், கைத்தொழிலாளர்களின் நீண்டகால பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் துறை தொடர்பாக தன்முனைப்பாற்றலை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு YouTube அலைவரிசை ‘‘விதாதா’’என்ற பேரில் ஆரம்பித்து அதனை தொழில்முயற்சியாளர்களுக்கு பயன்படுத்துவதற்காக இணையத்தில் அறிமுகப்படுத்துதல் விதாதா பிரிவின் மூலம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இது இணையத்தில் வெளியிடல் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர அவர்களின் தலைமைத்துவத்தில் அமைச்சின் செயலாளர், விதாதா பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது.





- **தொழில்நுட்ப உதவிக்கள நிகழ்ச்சித்திட்டத்தைச் செயல்படுத்துதல்**

கிராமியக் கைத்தொழிலாளர்களின் தயாரிப்புகள் மற்றும் அந்த கைத்தொழில்களில் உள்ள தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு உதவி வழங்கும் நோக்கத்துடன் தொழில்நுட்ப உதவிக்கள நிகழ்ச்சித்திட்டம் விதாதா பிரிவு மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுத்தமை சிறப்புத்தன்மை பெறுகின்றது. அதற்கமைய இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, ஏனைய மாவட்டங்களில் வழக்கத்திற்கு மாறாக அப்பாற்சென்று நிகழ்நிலை முறை பின்பற்றி (Zoom தொழில்நுட்பம் ஊடாக) நடாத்தப்பட்டது.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இலங்கை தர நிர்ணய நிறுவனம் (SLSI) தேசிய அருங்கலை பேரவை (NCC) தேசிய பொறியியல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (NERD) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) ஆகிய நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக வளவாளர்களது பங்களிப்பு வழங்குகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







கம்பஹா மாவட்ட தொழில்நுட்ப உதவிக்கள நிகழ்ச்சித்திட்டம்

தொழில்நுட்ப உதவிக்கள நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் கைத்தொழிலாளர்களின் பங்கேற்பு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

தொடர் இல.	மாவட்டம்	பங்குபற்றிய எண்ணிக்கை
1	கொழும்பு	92
2	கம்பஹா	107
3	கண்டி	130
4	அனுராதபுரம்	160
5	பதுளை	144
6	அம்பாந்தோட்டை	74
7	கேகாலை	134
8	களுத்துறை	165
9	நுவரெலியா	42
10	காலி	180
11	இரத்தினபுரி	123
12	புத்தளம்	95
13	குருநாகல்	78
15	பொலன்னறுவை	80
16	முல்லைத்தீவு	70
17	மொனராகலை	85
18	மாத்தறை	198
19	மாத்தளை	162
மொத்தம்		**2119**

இதற்கு மேலதிகமாக, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்காக சிங்கள ஊடகத்தில் 50 கைத்தொழில்துறையினரின் பங்களிப்புடன் மற்றும் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 175 தமிழ் கைத்தொழில்துறையினரின் பங்கேற்புடன் Zoom தொழில்நுட்பம் ஊடாக தொழில்நுட்ப உதவிக்கள நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இந்த பிரிவின் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

- **கிராமியக் கைத்தொழிலாளர்களுக்காக தொழில்நுட்ப உதவி மற்றும் அறிவு பரிமாற்ற நிகழச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்**

பயனாளிகளின் கோரிக்கைகளின்படி பிரதேச மட்டத்தில் கிராமியக் கைத்தொழில்கள் பற்றிய கோட்பாட்டு ரீதியிலான மற்றும் செயல்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விதாதா பிரிவு மூலம் நடத்துகிறது. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை 8537 ஆகும்.

பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு மேலதிகமாக கைத்தொழில்துறையினரை கிராமியக் கைதொழிலில் தக்கவைத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்காக அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளையும் அமைச்சு வழங்குகிறது. அதற்கமைய, நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய வகையில் மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நன்மைகளும் வழங்கப்பட்டன. அங்கு அதிகபட்ச அரசாங்க பங்களிப்பு ரூ. 100,000.00 அல்லது மொத்த மதிப்பில் 75% மற்றும் மீதமுள்ள 25% பயனாளியின் பங்களிப்புடன் புதிய கைத்தொழில் தொடங்குவதற்காக அல்லது கைத்தொழில்துறையை மேம்படுத்துவதற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமதி 36.48 ரூபா மில்லியன்களாகும்.

கிராமியக் கைத்தொழிலாளர்களுக்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர் இல.	**மாவட்டம்**	**பயன்பெறுநர் எண்ணிக்கை**
1	கொழும்பு	25
2	கம்பஹா	126
3	கண்டி	26
4	அனுராதபுரம்	21
5	பதுளை	24
6	அம்பாந்தோட்டை	37
7	கேகாலை	29
8	களுத்துறை	21
9	நுவரெலியா	9
10	காலி	15
11	இரத்தினபுரி	14
12	புத்தளம்	14
13	குருநாகல்	54
14	அம்பாறை	2
15	பொலன்னறுவை	3
16	முல்லைத்தீவு	2
17	கிளிநொச்சி	2

தொடர் இல.	மாவட்டம்	பயன்பெறுநர் எண்ணிக்கை
18	யாழ்ப்பாணம்	9
19	மொனராகலை	9
20	மன்னார்	1
21	மாத்தறை	54
22	மாத்தளை	17
23	திருகோணமலை	4
மொத்தம்		**518**









- **பிரதேச மட்டத்தில் விசேட கருத்திட்டங்களை செயல்படுத்துதல்**

பிரதேச மட்டத்தில் கிராமியக் கைத்தொழிலாளர்களின் தேவைக்கேற்ப குழுக்களாக மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளுக்காக விசேட கருத்திட்டங்களைச் செயல்படுத்துதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் பின்வரும் விசேட கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தொடர் இல.	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	விசேட கருத்திட்டங்கள்	பயனாளிகளின் எண்ணிக்கை	நிதிசார் பெறுமதி (ரூ.மி)
01	குருநாகல்	அலவ்வ	விளக்குமாறு மற்றும் தும்புத்தடி தயாரிப்பு	10	1.7
02	களுத்துறை	பாலிந்தநுவர	வெள்ளை தேய்காய் எண்ணெய் உற்பத்தி	05	0.42

- **கிராமியக் கைத்தொழில் தயாரிப்புகளுக்காக தரப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் தரச்சான்றிதழ்களை வழங்குதல்**

கிராமியக் கைத்தொழில் தயாரிப்புகளை சிறப்பங்காடி வலையமைப்புக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அவற்றின் தரத்தினை மேம்படுத்துதல் வாடிக்கையாளர் கவர்ச்சி மற்றும் எளிதாக சந்தை வாய்ப்புகளை அடைந்துகொள்ள முடியும். அதற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமியக் கைத்தொழிலாளர்களின் தயாரிப்புகளுக்காக தரச் சான்றிதழ்கள் மற்றும் தரநிர்ணய சான்றிதழ்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) மற்றும் இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தின் (SLSI) பங்கேற்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக 18.52 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர் இல.	தரச் சான்றிதழ் வகை	குறிப்பிடப்பட்ட தயாரிப்புகளின் எண்ணிக்கை
01	விதாதா முறைமைச் (VSC) சான்றிதழ்	57
02	சிறந்த தயாரிப்பு நடைமுறை ஒழுங்கு(GM) சான்றிதழ்	141
03	இலங்கை தரநிர்ணய (SLS) சான்றிதழ்	05





- **விதாதா வள நிலையங்களில் கொள்திறன் அபிவிருத்தி**

நாடளாவிய ரீதியில், அமைந்துள்ள விதாதா வள நிலையங்கள் பிரதேச மட்டத்தில் உள்ள கிராமிய கைத்தொழில்துறையினருக்காக தனித்துவமான சேவைகளை வழங்கும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் நோக்கத்துடன் 2021 ஆம் ஆண்டில் விதாதா நிலையங்களில் கொள்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் கீழ் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட விதாதா உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் 40 விதாதா வள நிலையங்களின் புனரமைப்பு மற்றும் 46 விதாதா வள நிலையங்களுக்கான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக 35 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **கிராமியக் கைத்தொழில்துறை தயாரிப்புக்களுக்கான சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்**

கிராமியக் கைத்தொழிலாளர்களின் தயாரிப்புகளுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கும் நோக்கத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக 30 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ்

- பிரதேச மட்டத்தில் 21 பசுமை அங்காடி (கடமண்டிய) விற்பனைச் சந்தைகள் மற்றும் 38 வாராந்திர சந்தைகளை நடாத்துதல்
- 21 விதாதா நிலையங்களுக்காக விற்பனை வசதிகளுக்காகத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.
- 274 விதாதா நிலையங்களுக்கு பெயர் பலகைகளை பொருத்துதல்
- விதாதா பிரிவுக்கான பின்னணித் திரை மற்றும் கொடிகளை வடிவமைத்தல்
- சந்தைப்படுத்தல் மேம்பாட்டிற்காகத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்
- கிராமியக் கைத்தொழிலாளர்களுக்காக பயனுள்ள புத்தகங்களை அச்சிடுதல்

ஒரு கிராமத்துக்கு ஒரு தொழில் முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்காக அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற அரசாங்க அனுசரணைக்கு மேலதிகமாக தொழில்முயற்சியாளர்களின் நிதி நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக அரச வங்கிகள் மற்றும் பிற அரச நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகைக் கடன் முன்மொழிவுத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் திட்டங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய புத்தகமொன்று அச்சிடப்பட்டுள்ளது.





தொழில்முயற்சியாளர்களுக்கு பயன்படுத்துவதற்காக உணவு தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ‘‘திவிமகட்ட பெரவதனக’’ என்ற புத்தகத்தின் முதலாம் தொகுப்பு அச்சிடப்பட்டது.





2.1.5. அபிவிருத்திப் பிரிவு

இந்த அமைச்சின் விடயவெல்லைக்குரிய கைத்தொழில்களின் அபிவிருத்தி பொருட்டு முன்னெடுக்கின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் பிரதான நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி பணிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒழுங்குபடுத்தல், கொள்கைகளுடனான வழிகாட்டல்கள், ஒத்துழைப்பு வழங்குதல், உள்நாட்டு கைப்பணி துறையில் மேம்பாடு கருதி மேற்கொள்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு, தொழில்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் என்பன அபிவிருத்தி பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்போது, தேசிய அருங்கலைகள் பேரவையால் மேற்கொள்ளப்படுகின்ற கிராமிய கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை பயிர் செய்யும் நிகழ்ச்சித்திட்டம், தேசிய மூலப்பொருட்களின் வங்கி தாபித்தல், கிராமிய மற்றும் சம்பிரதாய கைத்தொழில் கிராமங்களை ஒருங்கிணைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய கைத்தொழில்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை ஊக்குவித்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பு என்பன இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. விசேடமாக மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வனப் பாதுகாப்பு திணைக்களம், இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மொரட்டுவ

பல்கலைக்கழகம் ஆகிய தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்கின்ற பல்கலைக்கழக முறைமையுடன் இணைந்து அமைச்சின் செயற்பணியை அடைந்துக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக சட்டத்துடனான தடைகளை அகற்றல், உற்பத்தி சந்தைப்படுத்தல் சவால்களை வெற்றிகொள்ளுதல், உள்நாட்டு உற்பத்திகளை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல், கிராமிய மற்றும் சம்பிரதாய கைப்பணி கைத்தொழில் அபிவிருத்தியின் ஊடாக கிராமிய மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தலுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கடமைப்பொறுப்புகள் பின்வருவனவாகும்.

- **சம்பிரதாய கைப்பணி கைத்தொழில் கிராமங்கள் தொடர்பான தகவல் உள்ளடக்கிய தரவு முறைமை தயாரித்தல்**

இந்த நாட்டின் சம்பிரதாய கைப்பணி கைத்தொழில் கிராமங்கள் மற்றும் குறித்த கிராமங்களில் மேற்கொள்கின்ற உற்பத்திகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமை அபிவிருத்தி செயற்பாட்டில் தீர்மானங்கள் மேற்கொள்கையில் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை ஏற்படுத்துவதால், அமைச்சின் தலையீட்டுடன் சம்பிரதாய மற்றும் கிராமிய கைப்பணி கைத்தொழில் கிராமங்கள் தொடர்பான தகவல்களை திரட்டி அது தொடர்பான தரவு முறைமை தயாரிக்கும் நடவடிக்கை அபிவிருத்தி பிரிவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த தரவு முறைமை தயாரிப்பதற்கு தேவையான தகவல்களை மொத்த நாடும் உள்ளடங்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்வதற்கு இப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டதுடன், அதன்படி அமைச்சின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது, பரிசீலனைக்காகவும் கற்கும் மாணவர்களின் பரிசீலனைக்காகவும் இந்த தரவுத் தளம் பயனுள்ளதாக அமையும்.
இதற்கு மேலதிகமாக இலங்கையின் களிமண் படிவுகள் தொடர்பான தகவல்களும் இந்தப் பிரிவால் திரட்டப்படுகிறது.

- **தளபாடங்கள் உற்பத்தி கைத்தொழில் துறையின் அபிவிருத்தி**

அமைச்சு மூலம் நடைமுறைப்படுத்திய பிரதான கருத்திட்டமாக இந்த கருத்திட்டம் அறிமுகப்படுத்தலாம் என்பதுடன், இதன் குறிக்கோள் பின்வருமாறாகும்.

- மர வேலைகள் தொடர்பான துறையின் புத்தாக்கம் சார்ந்த அறிவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- மர வேலைகள் தொடர்பான துறையில் தொடர்ச்சியான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குதல்
- ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள வியாபார பங்குதாரர்களிடத்தில் அறிவுறுத்தலை மேற்கொள்வதற்காக பங்குதாரர்கள், எதிர்கால முதலீட்டார்கள் மற்றும் கலைஞர்களை ஒரே மேடைக்கு கொண்டு வருதல்.
- வீட்டுத் தளபாடங்கள் தொடர்பான கைத்தொழிலாளர்களுக்கு மரங்களைப் பரிசோதனை செய்வதற்காக நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளை அறிமுகப்படுத்தல்.

- டிஜிரல் சந்தைப்படுத்தல் மற்றும் நேரடி கொள்வனவுகளுக்கான தளமொன்றை தாபித்தல்.
- மர அடிப்படையிலான தயாரிப்புகளுக்கு தரநிலைச் சான்றிதழ் வழங்குதல்

இந்த நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் அமைச்சிடம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவு 60 ரூபா மில்லியன் ஆனதுடன், குறித்த ஒதுக்கீடுகளை பின்வரும் செயற்பாடுகள் பொருட்டு பயன்படுத்தப்பட்டது.

மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கை	**நிதி பெறுமதி (ரூபா.மில்)**
மர உற்பத்தி சார்ந்த புத்தாக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படல்	3.3
மர உற்பத்தி சார்ந்த வடிவமைப்பு புத்தாக்க நிலையங்களுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல்	4.59
87 பிரதேச செயலகப் பிரிவுகளில் 765 தச்சு வேலை செய்பவர்களை வலுவூட்டுவதற்கு உபகரணங்களை வழங்குதல்.	52.1
மொத்தம்	**60**

மர வேலைகள் சார்ந்த புத்தாக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் பொருட்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மூலம் மரம் சார்ந்த வடிவமைப்பு செய்றபாட்டு நிலையம் (Timber Process Innovation Centre) தாபிப்பதற்காக சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு அமைச்சின் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வமைச்சு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. குறித்த உடன்படிக்கை பிரகாரம் பின்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மரம் வேலை சார்ந்த ஆய்வுகூடம் தாபித்தல் மற்றும் ஆய்வு வசதிகளை அளித்தல்
- தாபனத்துடனான மர வேலைகள் மற்றும் உள்நாட்டு தளபாடங்கள் என்பவற்றின் தரம் பரிசோதனை செய்வதற்காக வழிகாட்டல்களை தயாரித்தல்
- மர வேலை சார்ந்த உற்பத்திகளின் வகைப்படுத்தல், பதிவு செய்தலின் ஆய்வு மற்றும் சந்தைப்படுத்தல் தளத்தினை அபிவிருத்தி செய்தல்.

- **தளபாடங்கள் சார்ந்த உற்பத்தி கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற கிராமிய கைத்தொழிலாளர்களை வலுவூட்டல்.**

ஒரு கிராமத்திற்கு ஒரு தொழில்முயற்சியாளரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக மாவட்ட மட்டத்தில் தளபாடங்கள் சார்ந்த உற்பத்தி கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற கிராமிய தைத்தொழிலாளர்களை வலுவூட்டுவதற்காக, தேவையான வசதிகளை

வழங்குவதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை அபிவிருத்தி பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதன்கீழ் 765 பயனாளர்களிற்கு நலன்களை வழங்குவதற்கு முடிந்தது.

தொடர் இலக்கம்	மாகாணம்	மாவட்டம்	பயனாளர்களின் எண்ணிக்கை
01	மத்திய மாகாணம்	கண்டி	9
		மாத்தளை	10
02	வட மத்திய மாகாணம்	அநுராதபுரம்	12
		பொலன்னறுவை	16
03	வடமேல் மாகாணம்	குருணாகல்	218
		புத்தளம்	45
04	சப்ரகமுவ மாகாணம்	கேகாலை	15
		இரத்தினபுரி	16
05	தென் மாகாணம்	காலி	56
		அம்பாந்தோட்டை	131
		மாத்தறை	5
06	ஊவா மாகாணம்	பதுளை	46
07	மேல் மாகாணம்	கொழும்பு	18
		கம்பகா	151
		களுத்துறை	17
	மொத்தம்		**765**

- **மட்பாண்டங்கள் சார்ந்த கைப்பணிக் கைத்தொழில் கிராமங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இந்த கருத்திட்டம் மட்பாண்டம் தொடர்பான கைவினைப்பொருட்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு பொருட்களை வழங்குவதற்கு இயலுமான வகையிலும் மற்றும் அண்டை கிராமங்களில் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி வளர்ச்சியடைந்த கிராமங்களாக மாற்றும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது.

இதன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கைத்தொழிலாளர்களுக்காக தொழில்முயற்சி பயிற்சி, உளப்பான்மை அபிவிருத்தி, உற்பத்திகளுக்காக புதிய வடிவமைப்பு மேம்பாடு நிகழ்ச்சித்திட்டங்கள், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர சாதனங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கிருப்பதுடன் பொது வசதிகள் நிலையங்கள் அபிவிருத்தி செய்வதனூடாக வசதிகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில், வீரம்புகெதர பிரதேச செயலகப் பிரிவில், கனுமலே, மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் பொல்வத்த மற்றும் அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவில் வீரகுல என்ற களிமண் கிராமங்களை அபிவிருத்திசெய்து மற்றும் 94 பயனாளிகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

- **பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழில் கிராமங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இக்கருத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 05 கைப்பணிக் கைத்தொழில் கிராமங்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு 2021 ஆம் ஆண்டிற்குள் நடவடிக்கையெடுக்கப்பட்டதுடன் அதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்காக தொழில் முனைவோர் பயிற்சி, **உளப்பான்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துதல், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர சாதனங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மற்றும் பொது வசதிகள் மேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதுடன்** அந்தந்த கிராமங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் இத்திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் இந்தத் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்கள் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் பற்றி பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

தொடர் இல.	கிராமத்தின் பெயர்	கிராம அலுவலர் பிரிவு	பிரதேச செயலகப் பிரிவு	கைத்தொழில் துறை	பயனாளிகளின் எண்ணிக்கை
01	களுகொதெயாவ	402 கிழக்கு/ மேற்கு	தொம்பே	களி	11
02	எலப்பன்குளம்	581 மரதன்கல்ல	மிகந்தளை	களி	27
03	போதிவல	போதிவல	ஹகுரங்கெத்த	சுளகு	10
04	படல்கும்புர	மடுகஹபட்டிய/எத்தலாமுல்ல	படல்கும்புர	களி	05
05	வேறகல	738பீ – கட்டகுறுதுகஹலந்த கிழக்கு / 738 ஏ-வேறகளை	பேருவளை	குழாய்	10
மொத்தம்					**63**

- **கிராமிய மற்றும் சம்பிரதாய கைத்தொழிலாளர்களின் உற்பத்திகள் பொருட்டு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.**

கிராமிய மற்றும் சம்பிரதாய உற்பத்தி கைத்தொழிலார்களின் உற்பத்திகளை, சந்தைப்படுத்தல் தொடர்பாக சர்வதேச மட்டம் வரை மேம்படுத்துவதற்கு அமைச்சானது, தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் என்பவற்றுடன் இணைந்து தேவையான பணிகளை முன்னெடுப்பதற்கு இவ்வாண்டில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், அதற்கு ஏற்புடையதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் அமைச்சு என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

- **CINEC தனியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சம்பிரதாய மற்றும் கிராமிய உற்பத்தி கைத்தொழிலாளர்களின் மேம்பாடு கருதி தொழில்நுட்பம் ஒப்படைக்கும் முறைமை தயாரித்தல்**

சம்பிரதாய மற்றும் கிராமிய உற்பத்தி கைத்தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக தேசிய மூலப்பொருட் வங்கிக்கான பன்புல் தயாரிக்கும் இயந்திரங்கள் (Machine for processing Agava) பிரம்பு நீக்கும் இயந்திரங்கள் (Machine for Removing Rattan) மற்றும் பிரம்பு வடிவமைப்பு இயந்திரங்கள் (Machine for processing Rattan) புதிதாக பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தேசிய அருங்கலை பேரவையிடம் குறித்த தொழில்நுட்பத்தை ஒப்படைத்தல் தொடர்பில் CINEC தனியார் பல்கலைக்கழகம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இராஜாங்க அமைச்சு என்பவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. கருத்திட்டம் ஆரம்பிக்கையில் செலவின் மதிப்பீடுகளின் படி ரூபா.1,770,000 ஆன ஒதுக்கீடு அமைச்சினால் CINEC தனியார் பல்கலைக்கழகத்திடம் வழங்கப்பட்டது.

- **வர்த்தக திணைக்களத்துடன் இணைந்து கிராமிய உற்பத்தி கைத்தொழிலாளர்களின் உற்பத்திகள் பொருட்டு, சந்தைப்படுத்தலை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்துவதற்கான முறைமை தயாரித்தல்.**

பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்கின்ற சம்பிரதாய மற்றும் கிராமிய கைத்தொழில் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளில் தரத்தினை மேம்படுத்துவதற்காக முறைமை தயாரித்தல்.

வெளிநாட்டு சந்தை தேவைகளுக்கு பொருந்துகின்ற வகையில் உயர் தரத்துடன் கூடிய பொருட்களை உற்பத்தி செய்கையில் பொருத்தமான வர்ணங்களை பயன்படுத்தும் முறை, உற்பத்திகள் குறைப்பாடுகளுடன் காணப்படுதல், நீர் கசிவு, வேறு இரசாயன செயற்பாடுகள் காரணமாக சம்பிரதாய மற்றும் கிராமிய கைத்தொழிலாளர்களினது உற்பத்திகளின் மேற்பரப்பில் பூஞ்சனம் (Mold) ஏற்படுதல், பூஞ்சை தொற்றுகள், (Fungus Infection) பூச்சிகளால் ஏற்படும் சேதங்கள் போன்ற விடயங்கள் உற்பத்தி பொருட்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஆகையால், கைத்தொழிலாளர்களுக்கு பொருட் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலின்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், தற்போதுள்ள இயற்கை வளங்களை உபயோகப்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் பல்கலைக்கழத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அடிப்படை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **உள்நாட்டு கைப்பணி கைத்தொழில்கள் மற்றும் உற்பத்திகளை வெளிநாடுகளில் மேம்படுத்தல்**

இந்த நாட்டின் சம்பிரதாய கைப்பணி பொருட்களை வெளிநாடுகளில் மேம்படுத்தும் நோக்கத்தில், இலங்கையில் சம்பிரதாய முகமூடிகள் மற்றும் தெரிவு செய்த சம்பிரதாய கைப்பணி கைத்தொழில் உற்பத்திகளை ரஷ்யாவின் தேசிய நூலகத்திடம் வழங்குமாறு மேற்கொண்ட வேண்டுகோளுக்கமைவாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து உரிய நடவடிக்கைகள் இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த நாட்டின் உள்நாட்டு கைப்பணி கைத்தொழில் உற்பத்திகளை வெளிநாடுகளில் கலாசார கண்காட்சிகள், வர்த்தக கண்காட்சிகள், சுற்றுலாத்துறை மேம்படுத்தல்கள் போன்ற சந்தர்ப்பங்களில், கண்காட்சிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பணிகளின் ஊடாக இலங்கையின் கைப்பணிகளை வெளிநாடுகளில் பிரபல்யப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **கிராமிய மற்றும் சம்பிரதாய கைத்தொழில் உற்பத்திகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.**

  - கெட்டஹத்த பழைய புகையிரத கட்டிடத்தை, சந்தைப்படுத்தல் நிலையமொன்றாக அபிவருத்தி செய்தல்.

இரத்தினபுரி மாவட்டத்தில் கிராமிய கைத்தொழில் உற்பத்தியாளர்களின் பொருட்களை சந்தைப்படுத்தலுக்கு உறுதியான சந்தைப்படுத்தல் நிலையம் இல்லாமை, பிரதான பிரச்சினையாக இனம் காணப்பட்டுள்ளது. புகையிரத வீதியின் பயன்பாடு முடிவடைந்த பின்னர், எஹலியகொட பிரதேச செயலகமாக பயன்படுத்தி, பிற்காலம் பயன்படுத்தாது கைவிடப்பட்டிருந்த கெடஹத்த பழைய புகையிரத கட்டிடத்தை, சந்தைப்படுத்தல் நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான இடமாக முன்மொழியப்பட்டிருந்தது.

கெடஹத்த பழைய புகையிரத கட்டிடத்தை, சந்தைப்படுத்தல் நிலையமாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில், போக்குவரத்து அமைச்சிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இந்த கட்டுமானம் பொருட்டு ரூபா.2,700,000 ஆன ஒதுக்கீடு அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்தைப்படுத்தல் நிலையத்தை “சௌபாக்கியா விஷ்மகலா மெதுர” என்ற பெயரில் அமைச்சு மற்றும் எஹலயிகொட பிரதேச செயலகம் ஒருங்கிணைந்து அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.





- நாராஹேன்பிட்ட " ரஜவாச" வளாகத்தில் சந்தைப்படுத்தல் குடில்களை தாபித்தல்

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்குரிய " ரஜவாச" வளாகம் கிராமிய மற்றும் சம்பிரதாய உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு பயன்படுத்தல் பொருட்டு, இவ்வமைச்சு மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை 2021 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், அந்த வளாகத்தில் கிராமிய மற்றும் சம்பிரதாய கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக வர்த்தக குடில்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு, தேசிய அருங்கலைகள் பேரவை என்பன ஒருங்கிணைந்து இந்த வர்த்தக குடில்களை மேற்படி கைத்தொழிலாளர்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்காக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது

- பொலன்னறுவை முணியான்டி குளம் சார்ந்து "ஹெல கலா" கிராமம் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்

பொலன்னறுவை மாநகர சபையால் மேற்கொண்ட வேண்டுகோள்படி பொலன்னறுவை கல் விகாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள முணியான்டி குளம் சார்ந்து, "ஹெல கலா" கிராமம் நிர்மாணிப்பதற்காக இவ்வமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 15 வர்த்தக குடில்களைக் கொண்டமைந்த இந்த கட்டுமான பிரதேசத்தில் கிராமிய மற்றும் சம்பிரதாய கைத்தொழிலில் ஈடுபடுகின்ற கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு பிரேரணை செய்யப்பட்டுள்ளது. மேலும், அதனூடாக பிரதேசத்தின் கூற்றுலாப் பயணிகளை கவருதல் மற்றும் கைத்தொழிலாளர்கள் வருமானம் ஈட்டுதல் போன்றவற்றுக்கு வாய்ப்பு அமைந்துள்ளது.

2.1.6. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அனைத்து மட்டங்களிலும் நிறைவேற்றப்படுகின்ற பணிகளை அளவிடுதல், மீளாய்வு, மதிப்பீடு செய்தல் மற்றும் உள்ளக நிர்வாக முறை தொடர்பாக அறிக்கையிடுவதன் மூலம் முகாமைத்துவத்துக்காக உதவுவது உள்ளக கணக்காய்வுப் பிரிவின் கடமைப்பொறுப்பாகும்.

2021ஆம் ஆண்டில் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

- **உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்**

2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளுதல் மற்றும் மூன்றாம் காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

- **கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளல்**

2021 ஆம் ஆண்டில் அமைச்சின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உள்ளக கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக கணக்காய்வினை மேற்கொள்ளல் மற்றும் செயல்திறன் கணக்காய்வு இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துதல்**

2021 ஆம் ஆண்டிற்குள், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் கூட்டங்களை நடத்துவதற்கான கட்டுப்பாடுகள் விதித்தமை காரணமாக, கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் ஒரு(01) கூட்டம் மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டது. அமைச்சின் கீழ் உள்ள தேசிய அருங்கலைப் பேரவையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 01 இற்காக அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியதோடு கணக்காய்வுக்காக அந்த நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதும் இடம்பெற்றது.

- **வழக்குகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

அமைச்சின் செயலாளருக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் இந்தப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டது.

.

2.2. அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்றிறன்

தேசிய அருங்கலைகள் பேரவை

1. அறிமுகம்

கைப்பணிக் கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியினைப் போன்று கைப்பணிக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தினை மேம்படுத்துவதனை முக்கிய நோக்காகக் கொண்டு 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்கம் கொண்ட தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அனுசரணை நிறுவன சட்டத்தின் கீழ் தேசிய அருங்கலைகள் பேரவை நிறுவப்பட்டுள்ளது. கடந்த பல தசாப்தங்களுக்குள் தேசிய அருங்கலைகள் பேரவையின் மூலம் கைப்பணிக் கைத்தொழில் பாதுகாப்பு அபிவிருத்தி மற்றும் கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களின் நலன்புரி தொடர்பாக பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1.1. தொலைநோக்கு

"நீண்டகால நிலைப்பாடு குறித்து சுதேச கைவினைப்பொருட்களை போஷித்தல் மற்றும் பாதுகாத்தல்"

1.2. செயற்பணி

''பாரம்பரிய மற்றும் கலாசார பெறுமதிமிக்க சுதேச கைவினைக் கைத்தொழிலை பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல், ஊக்கமளித்தல் மற்றும் மேம்படுத்துவதுடன் கைவினைஞர்களின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தினை மேம்படுத்துதல்".

1.3. முக்கிய குறிக்கோள் (Goal)

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கைவினைக் கைத்தொழில் துறையினால் கிடைக்கும் பங்களிப்பை அதிகரித்து கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமான வகையில் பங்களித்தல்.

1.4. நோக்கங்கள் / இலக்குகள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைப்பணிக் கைத்தொழில் துறையின் பங்களிப்பு 50% ஆல் அதிகரித்து **"பொருளாதார வளர்ச்சி வேகம்** 6.5% **ஆல் உயர்த்துதல்"** என்ற பேரண்டப் பொருளாதார இலக்கை அடைவதற்காக பங்களித்தல்.

- கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களின் தலா வருமானம் 50% ஆல் அதிகரித்து **"6500** ஐ அமெரிக்கன் டொலரிற்கு இற்கு மேலான தலா வருமானம்**"** என்ற பேரண்டப் பொருளாதார இலக்கை அடைவதற்காக பங்களித்தல்

- கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகள் ஏற்றுமதி செய்வதனூடாக வெளிநாட்டு அந்நியச் செலாவணி 2000 ரூபா மில்லியனால் உயர்த்துதல் மற்றும் இறக்குமதி பதிலீட்டு உற்பத்திகள் அறிமுகப்படுத்துவதனூடாக வெளிநாட்டுச் செலாவணி 5000 மில்லியன் ரூபாவால் பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவதனூடாக "ரூபாயின் மதிப்பு நிலையானதொரு மட்டத்தால் பேணுவதற்கு**"** பங்களித்தல்.

- 7500 கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்கள் மற்றும் தொழில் பயிலுனர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் 5000 சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் "வேலையில்லாத விகிதாசாரம் **4%** க்கும் குறைவான பெறுமதியினைப் பேணல்" என்ற பேரண்டப் பொருளாதார இலக்கை அடைவதற்காக பங்களித்தல்.

- மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தின் மூலம் **"உள்நாட்டு தொழில் முனைவோரை வலுப்படுத்துதல்"** என்ற அடிப்படை நோக்கங்களை அடைவதற்காக கைப்பணிக் கைத்தொழிலாளர்களுக்காக நிதி, சந்தை, பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்துதல்.

- துறைபோன மற்றும் பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களை மதிப்பிடுதல், ஊக்குவித்தல் , பாதுகாப்பு அளித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்டு **"தேசிய மரபுரிமைகள் சிறந்தமுறையில் பாதுகாத்தல்"** குறித்து பங்களிப்புச் செய்தல்

1.5. கடமைப்பொறுப்பு

- கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களைக் கண்டறிந்து தேசிய மட்டத்தில் பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகளை வெளியிடுதல்.

- கைவினைஞர்களுக்காக அரிதாகவுள்ள மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் இதுபோன்ற நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்

- கைப்பணிக் கைத்தொழில் சாரந்த சுய வேலைவாய்ப்புகளை ஆரம்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்

- கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் தரங்களைப் பேணுவதற்காக நிகழச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

- ஆசிரியர் கைப்பணி பயிற்சி நிகழ்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி வசதிகளை வழங்குதல்

- கைவினைஞர்களுக்கான பயிற்சி நிலையங்களின் மூலம் முழுநேர கைப்பணிக் கைத்தொழில் பயிற்சி வசதிகள் வழங்குதல் மற்றும் உற்பத்தி வசதிகள் வழங்குதல்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்

- மாகாணங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் கண்காட்சிகள் மற்றும் போட்டிகளை நடாத்துதல்

- கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தி சார்ந்த மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல்.

- கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு கடன் மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

- கைவினைஞர்களின் மற்றும் அவர்களின் குடும்பங்களில் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தினை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களினைச் செயற்படுத்துதல்.

- மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் போது மாகாண சபைகள் மற்றும் பிரதேச மட்டத்தில் அரச தாபனங்களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

2. 2021 வருடத்தின் செயலாற்றுகை

2.1. கிராமியக் கைத்தொழிலுக்காகத் தேவைப்படுகின்ற மூலப்பொருள் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டம்

கைப்பணிக் கைத்தொழில் உற்பத்தி தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற அரிதான மூலப்பொட்கள் எளிதில் கிடைக்கக் கூடியவகையில் ஏற்பாடு செய்வதற்காக அரசாங்கத்தினால் பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாட்டுக் காணிகளைப் பயன்படுத்தி இந்தக் கருத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில்களுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையை நீக்கி ˙உற்பத்தி செயல்முறையை தொடர்ந்தும் பேணுவதற்காகத் தேவையான மூலப்பொருட்களை வழங்குதல், மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துதல், உள்ளூர் கைத்தொழிலாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் கிராமிய கைத்தொழில் சார்ந்த பொருட்களின் உற்பத்திச் செலவைக் குறைத்தல் என்ற முதன்மை நோக்கத்துடன் 400 ஏக்கரில் பயிரிடுவதற்கு இந்த நிகழச்சித்திட்டம் மூலம் திட்டமிடப்பட்டிருப்பதுடன் இதுவரை 435.7 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- **சணல் சாகுபடி**

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	ஏக்கர் அளவு	பயிரிடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை
01	எஹெடுவெவ	எஹெடுவெவ	31	19,000
02	கல்தொட்டை	கல்தொட்டை	18	37,000
03	அனுராதபுரம் கிணிபட்டிமாயிம	பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது	37	44,400
04	கந்தகெட்டிய லொக்கலோயா	கந்தகெட்டிய	09	6,200
05	பொலன்னறுவை மகாவலி B வலயம்	பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது	180	197,600
06	மகாவலி L வலயம்	பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது	90	90,000
07	பிபில பேரண	பிபில	12	14,400
08	பதுளை வேவெல்ஹின்ன	ஹாலிஎல	04	2,000
09	மாத்தளை யடவத்த	மாத்தளை யடவத்த	01	1,200
10	கேகாலை பதுலுபிட்டிய	மாவனெல்ல	1/2	600
11	ஹங்குரங்கெத்த ஜோன்ஸ்டன் தோட்டம்	ஹங்குரங்கெத்த	01	1,200
மொத்தம்			**383.5**	**413,600**





இரத்தினபுரி - கல்தொட்டை சணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்





எஹெடுவெவ சணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்






பொலன்னறுவை மகாவலி B வலயம் சணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்





மகாவலி L வலயம் சணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்

- **நாணல் சாகுபடி**

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	ஏக்கர் அளவு	பயிரிடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை
01	களுத்துறை பன்தொட்ட	வலல்லாவிட்ட	8.5	158,800
02	காலி இந்துருவ	பென்தொட்ட	01	20,000
03	களுத்துறை மாவல	களுத்துறை	8.2	100,000
04	இரத்தினபுரி எலபாத	எலபாத	01	5,000
05	மாவிஎல	பண்டுவஸ்நுவர கிழக்கு	0.25	3,000
மொத்தம்			**18.95**	**286,800**









பன்தொட்ட நாணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்









களுத்துறை-மாவல நாணல் சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்

- **பிரம்பு சாகுபடி**

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	ஏக்கர் அளவு	பயிரிடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை
01	யட்டியந்தொட்ட பெலெல்லேகம	யட்டியந்தொட்ட	07	3000
02	வனாத்தவில்லுவ ரால்மடுவ	வனாத்தவில்லுவ	15	6000
03	அத்துரலிய வில்பிட்ட	அத்துரலிய	05	2000
04	களுத்துறை ஹொரணை	இங்கிரிய	02	800
மொத்தம்			**29**	**11,800**









வனாத்தவில்லுவ ரால்மடுவ பிரம்பு சாகுபடி நிகழ்ச்சித்திட்டம்

- **ஏனைய சாகுபடிகள்**

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	ஏக்கர் அளவு	பயிரிடப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை	தொடர் இல
01	ஹிரிகல்கொடெல்ல	பேருவளை	தாழை	01	400
02	பொலன்னறுவை மகாவலி B வலயம்	பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது	வெள்ளைச் சந்தனம்	180	1,000
03	பொலன்னறுவை மகாவலி B வலயம்	பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது	கருங்காலி மரம்	180	2,000
மொத்தம்				**361**	**3,400**

2.2. தேசிய மூலப்பொருள் முகாமைத்துவ அலகு (வங்கி) நிறுவுதல்

பிரம்பு, பித்தளை, களிமண் மற்றும் ஏனைய சிறப்புவாய்ந்த பாராம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களை பெறுவதிலுள்ள வசதிகள் விரிவாக்கம் செய்து கைப்பணிகள் உற்பத்திக்காக உள்ள கேள்வியினை விரிவுபடுத்தல் மற்றும் கிராமியக் கைத்தொழில் உற்பத்தித் துறை மற்றும் மூலப்பொருள் வழங்கும் வலையமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் சார்ந்த வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.


தேசிய அருங்கலைகள் மன்றத்தின் கீழ் மாகாண மட்டங்களில் மூலப்பொருள் வங்கி நிறுவி கைத்தொழிலாளர்களுக்காக தேவைப்படுகின்ற மூலப்பொருட்கள் மிகவும் நியாயமான விலைக்கு வழங்குவதற்காகத் தேவையான வசதிகள் இந்த கருத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்படும்.

- **மூலப்பொருள் களஞ்சியசாலை நிறுவுவதற்காக புதுப்பிக்கப்பட்ட களஞ்சியசாலை வளாகம்**

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	மாவட்டம்	மாகாணம்
01	வரகொட செரமிக் பயிற்சி நிலையம்	களனி	கம்பஹா	மேல்
02	இதிபரபே செயற்கை மலர் பயிற்சி நிலையம்	மீரிகம	கம்பஹா	மேல்
03	வேலிய பயிற்சி நிலையம்	மினுவாங்கொடை	கம்பஹா	மேல்
04	புலத்சிங்ஹல பிரம்பு பயிற்சி நிலையம்	புலத்சிங்ஹல	களுத்துரை	மேல்

தொடர் இல	இடம்	பிரதேச செயலகப் பிரிவு	மாவட்டம்	மாகாணம்
05	மத்திய மாகாண அலுவலகம் பொல்கொல்ல	பொல்கொல்லா	கண்டி	மத்திய
06	ஹபராதுவ விற்பனை நிலையம்	ஹபராதுவை	காலி	தென்
07	மூங்கில் பயிற்சி நிலையம்	குருவிட்ட	இரத்தினபுரி	சப்ரகமுவை
08	கவுந்திஸ்ஸபுர அம்பாந்தோட்டை	திஸ்ஸமகாராம	அம்பாந்தோட்டை	தென்
09	சேனாபதி மொனராகலை	மெதகம	மொனராகலை	ஊவா
10	பொலன்னறுவை - மானம்பிட்டிய	மனம்பிட்டிய	பொலன்னறுவை	வட மத்திய





கம்பஹா - வரகொட களஞ்சிய வளாகம்




கண்டி - பொல்கொல்ல களஞ்சிய வளாகம்

- **சுழல் நிதியிலிருந்து கைவினைஞர்களுக்கு வழங்குவதற்கு கொள்வனவு செய்த மூலப்பொருட்கள்**

தொடர் இல	மூலப்பொருள் வகை	அளவு	பெற்ற நிறுவனம்
01	பிரம்பு	அடி 11,850	-
02	தோட்டா உறை இரும்பு	4556.2 kg	விமானப்படை
03	பித்தளை செம்பு வெற்று தோட்ட உறைகள்	2385kg	கடற்படை

தொடர் இல	மூலப்பொருள் வகை	அளவு	பெற்ற நிறுவனம்
04	பித்தளை	42,164.12kg	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
05	வெள்ளி	9195kg	இலங்கை வங்கியின் சி.பேன்க்.கோல்ட் ஷொப்
06	களிமண்	25,000 kg	மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

2.3. பாரம்பரிய கிராமியக் கைத்தொழில் கிராமங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு பொருட்களை வழங்கக்கூடியவாறு உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் கிராமங்களாக உருவாக்கி அருகிலுள்ள கிராமங்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை அதிகரித்து முன்னேற்றம் பெற்ற கிராமங்களாக உருவாக்குதல் மற்றும் பொருளாதார சமூக அபிவிருத்தி போன்று வறுமை ஒழித்தல், மகளிர் வலுப்படுத்துதல், பிரதேச ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் மற்றும் தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதனூடாக பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில், இலங்கை பொருளாதாரத்தில் முக்கியமான துறையாக உருவாக்குதல் என்ற நோக்கத்துடன் இந்தக் கருத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் இலங்கையில் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் ஒரு மாவட்டத்திலிருந்தும் 4 கிராமங்கள் படி 2021 ஆம் ஆண்டில் பாரம்பரிய மற்றும் கிராமிய கைத்தொழில் 100 கிராமங்களை அபிவிருத்தி செய்து 3000 இற்கும் மேற்பட்ட பயன்பெறுநர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கைத்தொழிலாளர்களுக்காக தொழில்முயற்சி / உள்பான்மை அபிவிருத்தி, உற்பத்தி / புதிய வடிவமைப்பு மேம்பாடு நிகழ்ச்சித்திட்டங்கள், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர சாதனங்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கிருப்பதுடன் பொது வசதிகள் நிலையங்கள் அபிவிருத்தி செய்வதனூடாக வசதிகளை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, 2021ஆம் ஆண்டுக்குள் 98 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு 2738 பயனாளிகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களின் பட்டியல்**

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் குடும்பங்களின்
மாகாணம் - தென் மாகாணம் மாவட்டம் - மாத்தறை					
01	குபல்கம	வல்லிவல கிழக்கு, மேற்கு, தெற்கு, பிடிதுவ (379 ஏ)	வெலிகம	களி	19
02	பெதும்கம	ஊரபொல கிழக்கு	கபுறுபிட்டிய	மூங்கில் சிராய்கள்	18
03	ரத்மலே	பபரெந்த வடக்கு	திக்வெல்ல	களி	20
04	கியாடுவ, கலபடஹேன	360/C, கலபடஹேன கியாடுவ	அகுரெஸ்ஸ	மூங்கில் சிராய்கள்	28
மாவட்டம் - அம்பாந்தோட்டை					
05	அகுல்மடுவை	பெலிகள்ளை தெற்கு வடக்கு	பெலித்தை	நானாவித, லாக்ஷா, பித்தளை, பனை	25
06	கொஹொம்போறுவ	கொஹொம்போறுவ - 517	கட்டுவன	களி	94
07	விலமுல்ல	விஹாரமகாதேவிபுர	திஸ்ஸமகாராம	பனையோலை	30
08	ரன்ன (மே /கி)	ரன்ன (மே /கி)	தங்காளை	களி	54
மாவட்டம் - காலி					
09	பிட்டிகல	கரவ்வ, பிட்டிகல, களுஆரச்சிகொடை	நியாகம	கருங்கல் சார்ந்த சிற்பவேலைகள், செதுக்குக்கலை	23
10	பெரும்பாக காலி	இலக்கம் 99	கடவத்சத்தர	பீரலு ரேந்தை	18
11	தலவெல்ல	132ஏ, தலவெல்ல	ஹபராதுவை	தாழை	30
12	கிங்தொட்ட	பியதிகம	கடவத்சத்தர	நாணல்	17

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின்
மாகாணம் - வடமேல் மாகாணம் மாவட்டம் - குருணாகல்					
13	கலதரய	999 கலதரய	அலவ்வ	எள்ளு இலை, ஓலை விசிறி	25
14	தித்தவெல்ல	433/ தித்தவெல்ல	கனேவத்தை	களி	55
15	சோலேபுர/வீரபொக்குண	சோலேபுர/வீரபொக்குண	கிரிபாவ	நானாவித	25
16	தொரடியாகெதர	1411 தொரடியாகெதர	படுவஸ்நுவர / கிழக்கு	பிரம்பு	17
மாவட்டம் - புத்தளம்					
17	ரால்மடுவ கிராமம்	ரால்மடுவ	வனாதவில்லுவ	பிரம்பு	14
18	புளிச்சாகுளம்	593 புளிச்சாகுளம்	மூந்தலம	களி	19
19	ரபகனயாகம	644/1 ரபகனயாகம	நவகத்தேகம	நாணல் எள்ளு இலைகள்	22
மாகாணம்- கிழக்கு மாவட்டம் - மட்டக்களப்பு					
20	போரதீவு	பட்டபுரம்	வெல்லாவெலி	களி	30
21	வெதர்குடியிருப்பு	மண்முனைப்பற்று	அரவாம்தானி	ஏள்ளு	33
22	ஏறாஊர் பற்று 4	ஏறாஊர்	செங்களடி	களி	40
23	ஒருவில்	ஒருவில்	மண்முனை தெற்கு	தேங்காய் சிரட்டை	40
மாவட்டம் - திருக்கோணமலை					
24	ரால்குளி	முத்தேர்-3	முத்தேர்	களி	47
25	சினாமுல்லாய்சேனி	வெல்லாமணல்	திருகோணமலை நகரம்	சிப்பிஓடுகள்	25
26	சாலியபுர	மொல்லிபொத்தான	தாம்பலகிராம	நாணல்	36
27	அடம்போடாய்	வெல்லூர்ர்	கச்சவேலி	எள்ளு	34

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின்
மாகாணம்- கிழக்கு மாவட்டம் -அம்பாறை					
28	பனாமா	பனாமா தெற்கு	லாஹுகல	பனை	50
29	உகண	உகண	உகண	களி	38
30	ஹேனானிகல	ஹேனானிகல	தெஹிஅத்தக ண்டிய	நாணல்	17
மாகாணம்- சப்ரகமுவை மாவட்டம் - கேகாளை					
31	அல்கேகம	இலக்கம் 23, மா கெஹெல்வல	மாவனெல்லை	சணல்	30
32	பெலெல்லே கிராமம்	பெலெல்லே கிராமம்	யட்டியந்தோட் டை	மூங்கில்	30
33	கஹபிலியாகொடை	6 B, வஹவ	ரபுக்கனை	களி	18
34	கம்பனி	42 C, கீரபன	அரணாயக்க	களி	12
மாவட்டம் - இரத்தினபுரி					
35	குருவிட்ட மூங்கில் நிலையம்	தெல்கமுவை	குருவிட்ட	மூங்கில்	28
36	விக்கிலிய	252B, விக்கிலிய	பலாங்கொடை	சணல் நார்கள்	30
மாகாணம் - ஊவா மாவட்டம் - பதுளை					
37	தெஹிகொல்ல	தெஹிகொல்ல மற்றும் பெலிகல்ல	மஹியங்கனய	சிவப்பு களி	23
38	ஸ்பிரிங்வெளி	ஸ்பிரிங்வெளி, 85பி	ஹாலிஎல	மூங்கில் சார்ந்த உற்பத்திகள்	11
39	ஹாலிஎல ஹெதக்ம	பட்டிபொல, 75 பி	ஹாலிஎல	சிவப்பு களி	08
40	ஹல்தும்முல்ல	இஹல கொஸ்கம	ஹல்தும்முல்ல	பாரம்பரிய பலிதொவில	12

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின் (எண்ணிக்கை)
மாகாணம் - ஊவா மாவட்டம் - மொனராகளை					
41	கொடயான கொலொன்வின்ன	கொலொன்வின்ன	மொனராகளை	நாணல்	21
42	நாகல	நாகல	பிபில	பிரம்பு	32
43	செவனகல கொவுல்ஆர	கட்டுபிலகம	செவனகல	செரமிக்	05
44	பொல்கஹவெல	பொல்கஹவெல	மெதகம	சிவப்பு களி	13
45	கோதமீகம	கதிர்காமம்	கதிர்காமம்	பகட்டு. குளவி விதை	19
46	கரவிலேகம	கதிர்காமம்	கதிர்காமம்	ஏள்ளு ஓலை	18
மாகாணம் - மத்திய மாவட்டம் - கண்டி					
47	அம்பக்க	அம்பக்க, சியபலாகொடை	உடுநுவர	மர செதுக்கு வேலைகள் / சிற்பக்கலை	32
48	மஹரவெல/ திபியன்வத்தை	785 மஹரவெல	மெததும்பர	களி	31
49	மடவளை	640 மடவளை	பாத்ததும்பர	பித்தளை செதுக்கல்கள்	19
50	தலகுணே	875/ தலகுணே	உடுதும்பர	தும்பர ரட்டா பருத்தி	08
51	பிட்டவல	677 ஹூரிகடுவ மேற்கு	குண்டசாலை	களி	19
மாவட்டம் - மாத்தளை					
52	ருசிருகம	வெலிகம, உல்பத்திபாட்டிய, குரிவெல, பரகஹவெல	உக்குவெல	பித்தளை செதுக்கல்கள்	31
53	ஆலோக்ககம	ஆலோக்ககம	யட்டவத்த	சணல்	17
54	லேனாவளை, யெட்டிவஹர	லேனாவளை, யெட்டிவஹர	கலேவெல	களி சார்ந்த	08
55	நிலங்நொறுவை	நிலங்நொறுவை	பல்லெபொல	பாய்கள்	36

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின் (எண்ணிக்கை)
மாகாணம் - மத்திய மாவட்டம் - நுவரெலியா					
56	புராணகம	புராணகம	ஹகுரங்கெத்த	களி	14
57	எகிரிய / பல்லெபோவல	எகிரிய	ஹகுரங்கெத்த	சணல் நார்கள்	26
மாகாணம் - வட மத்திய மாவட்டம் - அனுராதபுரம்					
58	குணுராகம	654 பொத்தான துலான	மிகிந்தளை	நாணல்	31
59	குருலுகம	32 குருலுகம	கெபதிகொல்லேவ	களி	19
60	குடாகெலேகம	545 இஹல அபதலே	கலென்பிதுணுவெவ	களி	37
61	லூல்நேவ	198	கஹட்டகஸ்திகிலிய	களி	37
மாவட்டம் - பொலன்னறுவை					
62	இஹலவெவ	243 இஹலவெவ 239 அலுவாகும்புர	திபுலாகளை	களி	10
63	மாலக்கபுர	42 விஜயராஜவெவ	ஹிகுரக்கொட	நாணல் (ஹம்பு)	20
64	2 எல / பலுகஸ்தமன	174 பலுகஸ்தமன	தம்மன்கடுவை	பிரம்பு	25
65	அலுத்வெவ	111 தலாகொலவெவ	மெதகிரிய	நாணல்	15
மாகாணம் - மேல் மாவட்டம் - கொழும்பு					
66	ரணால களி மண் கிராமம்	469, ரணால	கடுவளை	களி	30
67	நவகமுவை தெற்கு	470A நவகமுவை தெற்கு	கடுவளை	முகமூடிகள்	13
மாவட்டம் - களுத்துரை					
68	திவலகட	822B, திவலகட E-மீகஹகும்புர	புலத்சிங்ஹல	மூங்கில் மற்றும் பிரம்பு	50
69	கலப்புகம	கலப்புகம மேற்கு	களுத்துரை	நாணல்	22
70	பன்தொட்ட	783 A தம்மன மேற்கு	வலல்லாவிட்ட	கருங்கல் நாணல் கைத்தொழில்	37

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின் (எண்ணிக்கை)
மாகாணம் - மேல் மாவட்டம் - கம்பஹா					
71	அலவல	364/A அலவல தெற்கு 364/ அலவல வடக்கு 364 B எத்தாஉடகந்த	அத்தனகல்ல	மூங்கில்	160
72	ஹுணுமுல்ல	ஹுணுமுல்ல	திவுலபிட்டிய	களி	17
73	14 போத்தலே பஹலகம	14 போத்தலே பஹலகம	மீரிகம	களி	45
74	சமுர்திகம	119/6 சமுர்திகம	மினுவாங்கொடை	களி	21
75	வீரசேக்கரபுர	பியகம வடக்கு, பியகம தெற்கு C	பியகம	களி	25
76	20ஏக்கர் கிராமம்	16 F ஹலுகம 16 A ஹலுகம	மீரிகம	மூங்கில் துணுக்கு மற்றும் பிரம்பு	45
77	ரதாவடுன்ன	360 ரதாவடுன்ன	மீரிகம	பிரம்பு	81
மாகாணம்- வடக்கு மாவட்டம் - வவுனியா					
78	பரமனந்தல்	பரமனந்தல்	வவுநியா	பனை	20
79	துட்டுவாகை	நேரியகுளம்	வெங்கலச் செட்டிகுளம்	பனை	21
80	பழையாறு	பூமடுவை - C209C	வவுநியா தெற்கு	நாணல்	16
81	ஸ்ரீராமபுரம்	கத்தர்சின்னகுளம்-215B	வவுநியா	கடதாசி கைப்பணிகள்/பதிக்	20
மாவட்டம் - யாழ்ப்பாணம்					
82	மட்டுவில்	மட்டுவில் தென்மராட்சி J/310	சுாவகச்சேரி	களி	14
83	வட்டுக்கோட்டை தென்மராட்சி	வட்டு தென்மராட்சி J/165	செங்கணானி	மரஞ்சாரந்த ஆக்கங்கள்	65

தொடர் இல	கிராமத்தின் பெயர்	கிராம சேவகர் பிரிவு	பி.செ.பி	கைப்பணிக் கைத்தொழில் துறை	நன்மைபெறும் கைவினைஞர்களின் (எண்ணிக்கை)
84	கொழும்புத்துறை	J/86, மூர் வீதி- தெற்கு J/87, மூர் வீதி- வடக்கு	யாழ்ப்பாணம்	நார் தொடர்பான வடிவமைப்புகள்	13
85	கல்வியங்காடு	கல்வியங்காடு J/113/109/90/257	நல்லூர்	களி	11
மாகாணம் - வடக்கு மாவட்டம் -மன்னார்					
86	தலைமன்னார் வடக்கு	புதுக்காமம் MN48	மன்னார் நகர்	பனை	25
87	சின்னபூவரசம் குளம்	பொன்னிதீவுகண்டல் MNN121	நானாட்டான்	பனை	20
88	வெட்டயமுறிப்பு	வெட்டயமுறிப்பு	மன்னார் மேற்கு	பனை	22
89	பேசாலை தென்மராட்சி	பேசாலை MNN 56	மன்னார் நகர்	பதிக்	26
மாவட்டம் -கிளிநொச்சி					
90	கரச்சி	J/310, J/311, J/312, J/327	கரச்சி	களி	10
91	தருமபுரம்	KN54,KN56,KN57	கண்டாவளை	களி	08
92	கிராஞ்சி	கிராஞ்சி KN 75	பூநகரி	பனை	42
93	கண்டாவளை.˙. உரியன்	உரியன் KN49, கண்டாவளை KN51	கண்டாவளை	பனை	53
94	கொவில்வயால்	KN 78/ KN 79	பச்சிலாபள்ளி	பனை	22
மாவட்டம் -முல்லைத்தீவு					
95	துணுக்கை	MU16,MU17	துணுக்கை	நாணல்	30
96	கல்லபாடு தெற்கு	MU110	மரித்தைப்பற்று	பனை	20
97	வலனியார்மடம்	முல்லிவியற்கால் மேற்கு	மரித்தைப்பற்று	பனை	23
98	உதயர்கட்டு	உதயர்கட்டு வடக்கு Mu46, உதயர்கட்டு தெற்கு Mu47	புதுகுடியிருப்பு	பனை	23
மொத்தம்					**2738**

- கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்





- கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உற்பத்தி / வடிவமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்

மேம்படுத்துவதற்கு முன்னரான உற்பத்திகள்




அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகள்






களிமண் சாரந்த உற்பத்தி கிராமம்








மாத்தளை – நிலங்னொறுவ நாணல் சார்ந்த உற்பத்தி கிராமம்






கேகாலை - அல்கேகம சணல் உற்பத்தி சார்ந்த கிராமம்

- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழில்துறையினருக்கு பட்டறை வசதிகளை வழங்குதல்




புத்தளம் - முந்தலம, புச்சாகுளம களிமண் சார்ந்த உற்பத்தி கிராமம்

- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொது வசதி நிலையங்களை புதுப்பித்தல்





காலி - பியதிகம நாணல் உற்பத்தி கிராமம்





மொனராகலை - நாகல பிரம்பு சார்ந்த உற்பத்தி கிராமம்

- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களின் கைவினைஞர்களுக்கு நன்மைகளை வழங்குதல்









அலவல மூங்கில் சார்ந்த கிராமங்கள்





ரதாவடுன்ன பிரம்பு சார்ந்த கிராமங்கள்

2.4. கிராமியக் கைத்தொழில் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் சார்ந்த உற்பத்திக்களுக்காக உள்ள கேள்வி மற்றும் இலங்கை தயாரிப்புகள் குறித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை மேம்படுத்தி, வெளிநாட்டு போட்டி தயாரிப்புகளைத் தாண்டி, மிக உயர்ந்த உள்ளூர் தயாரிப்புகளை நுகர்வோரின் கைகளில் ஒப்படைத்து, புதிய தயாரிப்பு வடிவமைப்புகள் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான அறிவினை பரிமாற்றிக்கொள்ளுதல் மற்றும் கிராமப்புற கைத்தொழிலாளர்களின் வருமானத்தினை மேம்படுத்தி வாழ்வாதாரத்தினை மேலோங்குதல் என்ற நோக்கங்களை அடைதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் கீழ் , தேசிய அருங்கலைகள் மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்ற கைப்பணிக் கைத்தொழில் தயாரிப்புகளை சந்தைப்படுத்தும் நிலையங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பாங்காடிகளில் விற்பனை அறையொன்று நிறுவப்பட்டு பொருட்களை விற்பனை செய்வதற்கும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசேட தினங்களில் மற்றும் வைபங்கள் இடம்பெறும் நேரங்களில் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்துவதற்கும், மாகாண மட்டங்களில் மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒருமுறை சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்துவதற்கும் இதன் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

- பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தில் வாராந்தம் ஒவ்வொரு வியாழக்கிழமைகள் தோறும் **"Shilpa Thursday"** 22 விற்பனைச் சந்தை நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- மாகாண மட்டத்தில் 8 விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (காலி, வாரியபொல, பல்லேகலே, சீகிரியா, கண்டி, பொலன்னறுவை, கேகாலை மற்றும் திருகோணமலை)

- தேசிய அருங்கலைகள் மன்றத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள குறிப்பிட்ட சிறப்பு விற்பனை நிலையங்களான கொழும்பு - கோட்டை டச்சு வைத்தியசாலை வளாகம், மொலகொட, காலி சிப்னாரா, வாரியபொல என்ற ''லக் ஷில்பா'' விற்பனை நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

- மின் சந்தைப்படுத்தலை (e-marketing) ஊக்குவிப்பதற்காக "www.Lakshilpa.com" "இ-மார்க்கெட்டிங் இணையதளம் 2021.11.22 ஆம் திகதி தொடங்கப்பட்டது.





பத்தரமுல்லை தியத்த உயன வளாகத்தில் "Shilpa Thursday" விற்பனைச் சந்தை





கண்டி KCC விற்பனைச் சந்தை





மின்-சந்தைப்படுத்தல் இணையதள துவக்கம் - பத்தரமுல்ல Water's Edge ஹோட்டல் வளாகம்

2.5. கைப்பணி கைவினைஞர்களுகளின் பதிவு மற்றும் அடையாள அட்டை வெளியீடு

கைப்பணித்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் காலோசிதமான தகவல்களை விபரங்களுடன் பெற்று தரவுத்தளம் தயாரித்து அதனை இற்றைப்படுத்தப்பட்டு அவர்களுக்காக தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவினை வழங்கி, புதிய அடையாள அட்டை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கைவினைஞர்களின் உற்பத்தி, கொள்ளளவு, ஆற்றல்கள், துறையில் பயன்படுத்தும் மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய தேவைகளை கிராம அலுவலர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் மாவட்ட மட்டத்தில் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கிடைக்கப்பெறும் உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு அனுப்பாணைக்காக இந்த தரவு முறைமை ஊடாக கைவினைஞர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமாகின்றது. 2021 ஆம் ஆண்டிற்குள் 2512 கைவினைஞர்கள் பதிவினை பூர்த்தி செய்திருப்பதுடன் 1479 அடையாள அட்டைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- **2021 சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை கைவினைஞர்களின் பதிவு**

தொடர் எண	மாகாணம்	மாவட்டம்	பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின எண்ணிக்கை	பதிவு செய்யப்பட்ட மொத்த கைவினைஞர்களின் எண்ணிக்கை
01	மேல்	கொழும்பு	76	608
02		களுத்துறை	80	
03		கம்பஹா	452	
04	வடமேல்	குருநாகல்	24	140
05		புத்தளம்	116	
06	சப்ரகமுவை	கேகாலை	167	197
07		இரத்தினபுரி	30	
08	தெற்கு	காலி	200	936
09		மாத்தறை	220	
10		அம்பாந்தோட்டை	516	
11	மத்திய	கண்டி	152	262
12		மாத்தளை	60	
13		நுவரெலியா	50	
14	வட மத்திய	அனுராதபுரம்	41	41
15		பொலன்னறுவை	-	
16	ஊவா	பதுளை	70	129
17		மொனராகலை	59	
18	கிழக்கு	திருகோணமலை	75	75
19		அம்பாறை	-	
20		மட்டக்களப்பு	-	

தொடர் எண	மாகாணம்	மாவட்டம்	பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின எண்ணிக்கை	பதிவு செய்யப்பட்ட மொத்த கைவினைஞர்களின் எண்ணிக்கை
21	வடக்கு	மன்னார்	49	124
22		யாழ்ப்பாணம்	50	
23		முல்லைத்தீவு	-	
24		வவுனியா	25	
25		கிளிநொச்சி	-	
	மொத்தம்			2512

2.6. சில்ப நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டம்

தேசிய அருங்கலைகள் பேரவை மூலம் நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையில் சில்ப நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டமானது பிரதான பங்கை வகிப்பதுடன், அதன் மூலம் கைவினைஞர்களுக்கு பாரிய சேவை ஆற்றப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வயதான கைவினைஞர்கள், மாற்றுத் திறனாளிகளுக்காக நன்கொடை தொகை வழங்குதல் போன்று அந்தந்த சந்தர்ப்பங்களில் கைவினைஞர்களால் மேற்கொள்கின்ற கோரிக்கைகளின் தொடர்பில் (சத்திர சிகிச்சைகள், இருதய நோய், கண் நோய் மற்றும் விசேட சத்திர சிகிச்சைகள் என்பன) சில்ப நலனோம்பல் யாப்பு பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 58 கைவினைஞர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 கைவினைஞர்களுக்கு ஆயுட்கால மாதாந்த கொடுப்பனவொன்றினை வழங்கியுள்ளது.

2.7. "சில்ப அபிமானி" சனாதிபதி விருது கைப்பணி கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சி

பாரம்பரிய கைப்பணிக் கைத்தொழில் கைவினைஞர்களைப் பாதுகாத்து ஊக்கமளித்து அவர்களின் படைப்புத் திறன்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மதிப்பாய்வுக்குட்படுத்தி அதற்காக நிதி மானியங்கள், திறன்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் எதிர்கால சந்ததியினரை இந்த துறையில் ஈர்க்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தேசிய அருங்கலைகள் பேரவை மூலம் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற சனாதிபதி விருது கைப்பணி கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சி "சில்ப அபிமானி -2021" சனாதிபதி கைப்பணிக் கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சிக்கு இணைவாக 09 மாகாணங்களும் உள்ளடக்கும் விதத்தில் மாகாண கண்காட்சிகள் மற்றும் 09 போட்டிகள் தேசிய அருங்கலைகள் பேரவை, மாகாண சிறு கைத்தொழில் திணைக்களம் மற்றும் மாகாண சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதோடு அதில் முதலாம் , இரண்டாம் , மூன்றாம் இடம் வெற்றியீட்டிய அனைத்து ஆக்கங்களும் "சில்ப அபிமானி - 2021" தேசிய போட்டி மற்றும் கண்காட்சிக்காக முன்வைக்கப்பட்டன. அங்கு வெற்றியீட்டும் கைவினைஞர்கள் சனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

- **“சில்ப அபிமானி -2021” தேசிய போட்டியில் சாதனைகளின் சுருக்கம்**

தொடர் இல.	மாகாணங்கள்	விருதுகள்						
		தங்கம்	வெள்ளி	முதலாம்	இரண்டாம்	மூன்றாம்	திறமை	மொத்தம்
01	மத்திய	01	07	13	10	09	50	**90**
02	தெற்கு	-	06	08	09	11	35	**69**
03	சப்ரகமுவை	-	-	07	08	06	48	**69**
04	மேல்	01	02	09	08	09	36	**65**
05	ஊவா	-	01	03	10	10	26	**50**
06	வட மத்திய	-	01	08	05	05	24	**43**
07	வடமேல்	-	01	02	03	04	21	**31**
08	வடக்கு	-	-	05	01	02	19	**27**
09	கிழக்கு	-	-	-	02	-	10	**12**
	மொத்தம்	**02**	**18**	**55**	**56**	**56**	**269**	**456**



பாரம்பரிய பிரிவு



நவீன பிரிவு

“சில்பா அபிமானி – 2021” தங்க விருது வென்ற ஆக்கங்கள

2.8. கைவினைஞர்களுக்கான பயிற்சிக் கருத்திட்டத்தின மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

110 கைவினைஞர்களுக்கான பயிற்சி நிலையங்கள் 19 மாவட்டங்களை உள்ளடங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ளன. இந்த பயிற்சி நிலையங்களிலிருந்து வருடாந்தம் முழுநேர காலத்திற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அவை கோட்பாடு மற்றும் செய்முறை ஆகிய பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன. மேலும் கைவினைஞர்களுக்கான பயிற்சி நிலையங்களினூடாக பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்காக தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளையும் குறித்த நிலையங்களினூடாக வழங்குதலும் குறிப்பிடத்தக்கதாகும். பயிற்சிக் காலப் பகுதியில் பயிலுநர்களுக்காக மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், செய்முறை பயிற்சிக்கு தேவையான மூலப்பொருட்கள், நிலையங்களிற்கு வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் குறித்த நிலையங்களினூடாக முழுநேரம் பயிற்சிபெற்ற பயிலுநர்களின் எண்ணிக்கை 385 ஆக இருப்பதுடன் 295 கைவினைஞர்களுக்காக தயாரிப்புகளுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் உள்ள பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை, செயல்பாட்டு நிலையங்களின் எண்ணிக்கை, முழுநேர பயிற்சி பெற்ற பயிலுணர்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி வசதிகள் வழங்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை ஆகியவற்றை கீழே உள்ள அட்டவணை விளக்குகிறது.

தொடர.இல.	மாவட்டம்	மொத்த நிலையங்களின் எண்ணிக்கை	செயல்படுத்திய நிலையங்களின் எண்ணிக்கை	முழுநேர பயிற்சிபெற்ற பயிலுநர்களின் எண்ணிக்கை	உற்பத்தி வசதிகள் வழங்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை
01	காலி	9	4	30	11
02	மாத்தறை	5	4	27	02
03	அம்பாந்தோட்டை	6	3	23	12
04	கண்டி	12	12	33	28
05	நுவரெலியா	4	4	19	18
06	மாத்தளை	2	2	13	10
07	கொழும்பு	3	3	28	-
08	கம்பஹா	11	11	06	23
09	களுத்துறை	10	4	19	16
10	குருநாகல்	18	18	31	119
11	அநுராதபுரம்	2	2	27	05
12	பொலன்னறுவை	3	3	35	16
13	மொனராகளை	1	1	10	05
14	கேகாலை	6	5	45	13
15	இரத்தினபுரி	3	3	39	17

தொடர .இல.	மாவட்டம்	மொத்த நிலையங்களின் எண்ணிக்கை	செயல்படுத்திய நிலையங்களின் எண்ணிக்கை	முழுநேர பயிற்சிபெற்ற பயிலுநர்களின் எண்ணிக்கை	உற்பத்தி வசதிகள் வழங்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை
16	மட்டக்களப்பு	9	-	-	-
17	திருக்கோணமலை	4	-	-	-
18	யாழ்ப்பாணம்	1	-	-	-
19	அம்பாறை	1	-	-	-
மொத்தம்		**110**	**79**	**385**	**295**

2.9. கைவினைஞர் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் நடைமுறைப்படுகின்ற 110 கைவினைஞர்களின் பயிற்சி நிலையங்கள் மட்டும் உள்ளதுடன், இந்த நிலையங்கள் பெரும்பாலனவை பயன்படுத்த முடியாத மிகப் பழமை வாய்ந்த கட்டிடங்களைக் கொண்டமைந்துள்ளன. ஆகையால், ஆகக் குறைந்த வசதிகளை கொண்டமைந்துள்ள இந்த நிலையங்களை அபிவிருத்தி செய்து புதிய சந்ததியினரை கைப்பணி தொழில்துறை மீதுள்ள ஈடுபாட்டினை அதகரிப்பதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, இவ்வாண்டில் பொலன்னறுவை, கதுறுவெல, கெஸ்பேவ-கிதெல்பிட்டிய மற்றும் பத்தரமுல்லை நிலையங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





பத்தரமுல்லை பயிற்சி நிலையம்

2.10. மனித வளங்களின் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்

நிறுவனத்தில் உள்ள பெறுமதியான வளமான மனித வளங்களின் அபிவிருத்தி காலோசிதமான தேவை மட்டுமன்றி அதனூடாக திருப்தியும் விளைவுத் திறனையும் அதிகரிப்பதற்கு முடியுமாகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பணியாற்தொகுதியின் ஆற்றலையும் அறிவினையும் விருத்தி செய்வதற்குத் தேவையான மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது அடிப்படையில் ஆங்கில மொழி, கணினி அறிவு, கருத்திட்ட முகாமைத்துவம் ஆகிய பிரிவுகள் மீது கவனம் செலுத்தப்பட்டன.

அதற்கமைய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் பயிற்சியளிக்கப்பட்ட பணியாற்றொகுதி 40 ஆகும்.

அத்தியாயம் - 03

2021 ஆம் ஆண்டுக்கான நிதியியல் செயலாற்றுகை

3.1. 2021 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதியியல் செயலற்றுகைக் கூற்று ACA -F

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை (ரூபா.)		
			2021	திருத்தப்பட்ட 2020	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**	-	-	**ஏசீஏ-1**
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,006,512,000	204,523,483	**ஏசீஏ-3**
-	வைப்புகள்		640,663	449,885	**ஏசீஏ-4**
-	முற்பணக் கணக்குகள்		16,284,303	51,254,230	**ஏசீஏ-5**
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**1,023,436,966**	**256,227,598**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**1,023,436,966**	**256,227,598**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**1,023,436,966**	**256,227,598**	

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை (ரூபா.)		
			2021	திருத்தப்பட்ட 2020	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
609,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	524,387,041	440,452,233	
270,170,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	210,671,392	48,069,660	**ஏசீஏ-2(ii)**
171,800,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	164,362,137	154,094,246	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
100,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	-	-	
1,051,070,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**899,420,570**	**642,616,139**	
	மூலதனம் செலவினம்				
9,670,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	6,401,590		
8,600,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	8,477,289	2,513,544	
51,000,000	மூலதன மாற்றல்கள்	**12**	37,450,000	3,137,132	**ஏசீஏ-2(ii)**
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	56,360,125	
4,500,000	திறன் விருத்தி	**14**	3,097,839	-	
2,115,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	1,258,240,044	20,017,934	
2,188,770,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**1,313,666,762**	**82,028,735**	

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை (ரூபா.)		
			2021	திருத்தப்பட்ட 2020	
	வைப்புக் கொடுப்பனவுகள்		640,663	449,885	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		13,467,939	70,169,575	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		14,108,602	70,619,460	
3,239,840,000	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		2,227,195,934	795,264,334	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(1,203,758,968)	(539,036,736)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி				ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		(1,203,758,968)	(539,036,736)	ஏசீஏ-3

3.2. 2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு நிதியியல் நிலைக் கூற்று ACA-P

	குறிப்பு	உண்மை நிலை (ரூபா.)	
		2021	2020
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	361,618,377	337,832,233
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	56,113,262	58,929,626
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**417,731,640**	**396,761,859**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		40,714,423	43,530,786
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		361,618,377	337,832,233
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	15,398,840	15,398,840
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**417,731,640**	**396,761,859**

பக்க இலக்கம் **01** முதல் **61** வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் **62** முதல் **85** வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2022/02/28	திகதி : 2022/02/28	திகதி : 22.02.2022

General Daya Ratnayake
Secretary
Ministry of Industries
73/1, Galle Road, Colombo 03.

M. A. B. V. Bandaranayake
Secretary
State Ministry of Rattan, Brass, Pottery, Furniture and Rural Industrial Promotion
Level 07, West Tower,
World Trade Centre
Colombo 01.

K. K. D. C. ISHARA
Chief Accountant
State Ministry of Rattan, Brass, Pottery, Furniture and Rural Industrial Promotion
Level 07, West Tower,
World Trade Centre, Echelon Square,
Colombo 01.

3.3. 2021 டிசெம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று ACA-C

	உண்மை (ரூபா.)	
	2021	**2020**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	24,165,415	7,027,994
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,006,512,000	204,523,483
முற்பணங்களை அறவிடல்	16,572,889	72,301,579
வைப்புக்களின் பெறுகை	640,663	449,885
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**1,047,890,967**	**284,302,941**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	683,485,888	117,662,216
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	5,117,937	1,192,548
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,437,660	93,004,014
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	
முற்பணக் கொடுப்பனவு	13,467,939	70,175,825
வைப்புக் கொடுப்பனவு	640,663	449,885
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**706,150,088**	**282,484,488**

	உண்மை (ரூபா.)	
	2021	**2020**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**341,740,879**	**1,818,453**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	341,740,879	1,818,453
	341,740,879	**1,818,453**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)		
	(341,740,879)	**(1,818,453)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளுர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-

	உண்மை (ரூபா.)	
	2021	2020
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
